C M Y K

SKY WINGS LTD
TRAVEL AGENTS
WORLWIDE
24 hour
Ticketing
ROYAL JORDANIAN
119 Tooting High Street
London SW17 0SY
Tel: 020 8672 9111

VADALEE
# வடலீ
FREE - COMMUNITY PAPER சமூகப் பத்திரிகை March 2008 வடலி 7 ஓலை 82

எது?
எப்பொழுது?
எங்கே?
விரைவில்
www.udukku.com
உடுக்கு டொட் கொம்

# குடியுரிமை வழங்கல் முறையில் முக்கிய மாற்றங்கள் கொண்டுவரப்படுகின்றன

வெளிநாட்டவர்களுக்கு பிரித்தானிய குடியுரிமை வழங்கும் முறையில் மிகப்பெரிய மாற்றங்கள் கொண்டு வரப்படவுள்ளன.

இம் மாற்றங்கள் சென்ற வருடம் நடைபெற்ற தொடர்ச்சியான கலந்துரையாடல் மற்றும் ஆலோசனைகளின் பெறுபேறுகளாகும். இவ்வாண்டின் இறுதியில் சட்டமாக்கப்படவுள்ள விதிமுறைகள், குடியுரிமை வழங்கலை மூன்று கட்டங்களாகப் பிரிக்கிறது.
முதல் கட்டம் தற்காலிக வதிவுரிமை ஆகும். இது தற்பொழுதும் நடைமுறையில் உள்ளது. இரண்டாம் கட்டத்தில்தான் முக்கிய மாற்றம் கொண்டுவரப்படுகிறது. அதாவது, தகுதி உடையவர்களுக்கு சில நிபந்தனைகளுடன், தேர்வுநிலை முறையில் குடியுரிமை வழங்குதலாகும். மூன்றாவது கட்டத்தில் தேர்வுநிலையில் உள்ளவர்களுக்கு தேவையான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் முழுமையான குடியுரிமை வழங்குதலாகும்.
குடியுரிமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, இங்கு வசிக்க வருபவர்கள் ஆங்கிலம் பேசுபவர்களாகவும், சட்டத்திற்கு பணிவானவர்களாகவும், சமூக நலனில் அக்கறையுடன் செயல்படுபவர்களாகவும் இருக்க வேண்டும் என்பதே அநேகரின் விருப்பாக உள்ளது.

குடியுரிமை வழங்கல் முறை காலத்திற்குக்காலம் பல மாற்றங்களைச் சந்தித்து வருகிறது. ஒரு காலத்தில் இந்நாட்டில் வீசாவுடன் ஒரு குறிப்பிட்ட காலம் வாழ்ந்த எல்லோருக்குமே குடியுரிமை பெறும் சாத்தியம் இருந்தது. ஆனாலும் பின்பு ஆங்கில அறிவும் நாட்டின் நடைமுறை பற்றிய அறிவும் மேலதிகமாகத் தேவை என மாற்றம் கொண்டுவரப்பட்டது.

இவ்வான்டின் இறுதியில் வரப் போகும் குடியுரிமை வழங்கல் முறையானது மிகப்பெரிய மாற்றங்களுக்கு உள்ளாகிறது. குடியுரிமை பெறப் போகின்றவர் தான் பொறுப்புள்ள குடிமகன் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை உள்ளதுடன், அரசும் குற்றவாளிகளுக்கு குடியுரிமை வழங்கலை மறுக்க வசதி ஏற்படுத்துகிறது. சிறு குற்றவாளிகள் விடயத்தில்கூட தேர்வு நிலையில் உள்வர்களின் தேர்வு நிலகைக் காலத்தை நீடிப்பதற்கு வசதி ஏற்படப்போகின்றது..

இது தொடர்பாகப்பேசிய பிரதமர் கோடன் பிறவுண் இனிவருங் காலத்தில் பிரித்தானியக் குடியுரிமை பெறுவது மிகவும் இறுக்கமாக இருக்குமென்று கூறியுள்ளார்.

# திருமண விசாபெற்று இங்கு வருவோர்களுக்கு ஆங்கில மொழி தெரிந்திருக்க வேண்டும்

இனிவருங்காலத்தில் திருமண விசாபெற்று இங்கு வருவோர்களுக்கு ஆங்கில மொழி தெரிந்திருக்க வேண்டுமெனவும் அதற்கான மொழியறிவுப் பரீட்சை நடத்தப்படுமெனவும் பிரித்தானியா அறிவித்துள்ளது.

நிச்சயிக்கப்பட்ட திருமணத்தின் மூலம் விசா பெற்று பிரித்தானியாவுக்கு வருபவர்கள் குறிப்பாக இந்திய உபகண்டத்தைச் சேர்ந்த பெண்கள் கணவன்மார், மாமிமார், மச்சாள்மாரின் கொடுமைக்கு ஆளாகும்போது தமது அவலநிலையை ஆங்கிலமொழி தெரியாததால் முறையிட முடியாமல் பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை எடுக்க ஆலோசிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதனைக் கருத்தில் கொண்டே



திருமண விசாப் பெற விண்ணப்பிக்கும் வெளிநாட்டவர்கள் மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமென அரசு இப்போது வலியுறுத்துகிறது.
ஆங்கில மொழி அறிவின்மையால் தமது கணவனுடன் இணைந்து கொள்ள இங்கு வருவோர் பாதிக்கப்படாமலிருப்பதை உறுதி செய்யவே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுவதாக பிரதமர் கோர்டன் பிரவுண் தெரிவித்துள்ளார்.

திருமண விசாவுக்கு விண்ணப்பித்து இங்கு வாழ்வதற்கு திட்டமிடுவோருக்கு ஆங்கில மொழி அறிவு தேவையென்ற புதிய திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தவுள்ளோம். இங்கு வாழ விரும்பும் ஒவ்வொருவரும் ஆங்கிலத்தில் பேசக் கூடியதாக இருக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.
பிரித்தானியாவுக்கு வருகை தரும் குடியேற்றவாசிகளுக்கு வரி அறவிடும் சர்ச்சைக்குரிய திட்டங்களை அரசாங்கம் வெளியிட்ட சில மணித்தியாலங்களில் திருமண விசா தொடர்பான இந்தப் புதிய அறிவிப்பும் வெளியாகியுள்ளது.
2006 இல் உபகண்டத்திலிருந்து 17 ஆயிரம் பேர் திருமண விசா பெற்று பிரித்தானியாவுக்கு வந்துள்ளனர். இவர்களில் அநேகமானோர் இளம் பராயத்தவராகவும் கல்வியறிவு குறைந்தோராகவும் இருப்பதாகவும் இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தானைச் சேர்ந்த பெண்களே இவர்களில் அநேகமானோர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
கணவன்மார், மாமியார்மார்களால் பாதிக்கப்படும் இவர்கள் ஆங்கிலம் பேசத்தெரியாததால் பொலிசாரையோ அல்லது சமூக சேவைப் பிரிவினரையோ அணுக முடியாத நிலைமையும் உள்ளது.
இதனையடுத்தே அரசாங்கம் திருமண விசா பெற ஆங்கில மொழியறிவு பரீட்சையை நடத்தவுள்ளது.

உங்கள் அபிமான வடலியை இப்பொழுது இணையத்திலும் பார்வையிடலாம்
www.vadalee.com
www.vadalee.com
www.vadalee.com
www.vadalee.com
www.vadalee.com

Travel RIGHT
The RIGHT people to do business
82 MITCHAM ROAD, TOOTING, SW17 9NG
Worldwide Travel Agent
Main Agents for
ATOL 5766
IATA
020 8767 7775
Mobile : 07850 876 921
E-mail : bala@skybooker.com

தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்
LAKSHMIS
JEWELLERS
276 High Street North, Eastham , London E12 6SA
Tel: 020 8470 5600 Fax: 020 8470 3448
தரமான தங்கநகைகளை மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
லக்சுமிஸ் ஜுவலர்ஸ்
தரமான தங்கத்திற்கு இண்டனில் சிறந்த இடம்

Mortgagelink
The National Mortgage Network
Mob - 07930 626 585
Tel - 020 8946 5566
Nearest Underground :Tooting Broadway - Northern Line
☆ எந்தவிதமான DEPOSIT இல்லாமல் வீடு வாங்கவேண்டுமா?
இலண்டனிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் புதிதாக கட்டப்படும் வீடுகள் வாங்க விரும்பினால், 5% DEPOSIT + STAMPDUTY £2000-00 அளவில் வீடுகட்டுபவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்போம். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED ON IT

For News /Articles/ Adverts:
020 8694 7412
PO Box 24783 London SE13 7YE
E-mail: vadalee@lycos.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரித்தானியச் செய்திகள் - சி.மாசிலாமணி

## வன்முறைக் குற்றச்செயல்களுக்கு எதிரான செயற்திட்டம் வெளியிடப்பட்டுள்ளது

வன்முறைக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் அணுகுமுறைகள் அடங்கிய திட்டம் உள்நாட்டலுவல்கள் அலுவலகத்தால் வெளியிடப்பட்டுள்ளது. அடுத்த மூன்று ஆண்டுக்குள், கொலை, கத்தி கொண்டு தாக்குதல், துப்பாக்கி, குழு வன்செயல், பாலியல் வன்செயல், குடும்ப வன்முறை ஆகியவற்றைத் குறைக்க உள்ளூர் முகவர் அமைப்புக்கள் மற்றும் காவல் துறையினருடன் சேர்ந்து அரசு செய்ய இருக்கும் அணுகுமுறைகள் அதில் வெளியிடப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின் கீழ் உடனடியாக கத்தி போன்ற ஆயுதங்களை படிவமெடுத்து (ஸ்கான்) கண்டறியும் 100 சாதனங்கள் 400 தேடு-கோல் சாதனங்கள் ஆகியவை காவற் துறையினருக்கு வழங்கப்பட உள்ளதுடன் கத்தி போன்றவற்றைக் கொண்டு செல்பவர்களுக்கு வழங்கப்படும் தண்டனையும் அதிகரிக்கப்பட உள்ளது. ஆயுதங்களால் ஏற்படும் ஆபத்து சம்பந்தமான கல்வி, பாலியல் துஷ்பிரயோகிகளிடமிருந்து சிறுவரைக் காப்பாற்றுதல் போன்ற வேறு நடவடிக்கைகளும் இதில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

## பிரித்தானியாவுக்கு குடி வருபவர்களுக்கு பொறுப்பு ஏற்போர்க்கு புதிய கட்டணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு கல்விக்காகவும் வேலைக்காகவும் வருவோரை பொறுப்பு ஏற்கும் நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட இருக்கும் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறு நிறுவனங்களும் அறக்கட்டளை அமைப்புக்களும் 300 பவுண்கள் மட்டும் செலுத்தி தங்களுக்கு தேவைப்படும் ஆற்றல் பணியாளர்களின் வருகைக்கு பொறுப்பு ஏற்கலாம். மற்றைய தொழில் வழங்குவோர் எல்லோரும் பொறுப்பு ஏற்கும்போது தலா ஆயிரம் பவுண் செலுத்த வேண்டும்.
மாணவர்களைக் அழைக்க பொறுப்பு ஏற்கும் கல்வி நிறுவனங்களும் மற்றைய அமைப்புகளும் தலா 400 பவுண்கள் செலுத்த வேண்டும்.

## அளவு மீறின மதுக் கட்டுப்பாடும் ரெஸ்கோவும்

மலிவான மதுபானங்களின் விற்பனை அளவை கட்டுபடுத்த அரசு எடுக்கும் திட்டத்திற்கு தாம் ஒத்துழைப்பு வழங்கஉள்ளதாக மிகப்பெரிய சுப்பமார்க்கற் நிறுவனமான 'ரெஸ்கொ' முன்வந்துள்ளது.

மலிவுவிலை மதுபான விற்பனையால் மிதமீறிக் குடிப்பவர்கள் தொகை அதிகரித்து வருகிறது என்றும் கடுமையான சட்டம் கொண்டவரப்பட்டு இவை கட்டப்படுத்தப்பட வேண்டம் என்றும் பிரித்தானிய மருத்துவ சங்கம் கூறியுள்ளது.
தாங்கள் தனித்து மலிவு விலை மது விற்பனையை குறைத்தால் தங்கள் தலையில் தாங்களே மண்ணை அள்ளிப் போடுவதாக ஆகிவிடும் என்றும் அதற்குரிய சூழல் ஏற்படும் பட்சத்தில் ஒத்துழைக்க உள்ளதாக ரெஸ்கோ நிறுவனத்தினர் கூறியுள்ளனர்.
அளவுமீறிய குடிக்கு, பொது விடுதிகள் 24 மணி நேரமும் திறந்திருப்பது, குறைந்த மதுபான வரி ஆகியவையும் காரணிகளாக அமைவதால் அவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்பதே பொது அபிப்பிராயமாக உள்ளது.

## இசையும் இருதயத் தாக்கமும்

இருதயத் துடிப்புத் தாக்கத்துக்கு உள்ளாகுவோருக்கு சிகிச்சை அளிக்கும்போது சிகிச்சையுடன் இசையும் அளிப்பது நல்ல பயனைத் தருவதாகக் கண்டு பிடிக்கப் பட்டுள்ளது.
கெல்சிங்கி பல்கலைக் கழகத்தின் தலையாய ஆய்வாளர் ரெப்போ சாக்கமோவின் வைத்தியக் குழுவினரே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளனர். அவர்கள் இருதயத் தாக்கத்திற்கு உள்ளானோருக்கு சிகிச்சை அளிக்கும்போது ஒரு பகுதியினருக்கு சிகிச்சையை மட்டும் வழங்கியும் ஒரு பகுதியினருக்கு அவர்கள் விரும்பும் பேச்சு ஒலி நாடாக்களையும் கேட்க வைத்தும் ஒரு பகுதியினருக்க்கு இசை நாடாக்களைப் போட்டும் சோதனை நடத்தினார்கள்.

இதனை ஆதரித்து நோயாளிகளும் பேட்டி அளித்துள்ளார்கள். ஆயினும் இது இன்னும் ஆய்வு நிலையிலேயே உள்ளது.

## விமானங்கள் பறக்கும் ஒலி இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும்

விமானங்கள் பறக்கும் போது எழுப்பப்படும் ஒலியானது மனிதர்கள் நித்திரையில் இருக்கும் போதும் இரத்த அழுத்தத்தை அதிகரிக்குமென புதிய மருத்துவ ஆய்வொன்று தெரிவித் துள்ளது.
விமான நிலையங்களுக்கு அருகில் வசிப்பது



உங்களுக்கு அசௌகரியத்தை மட்டும் தரவில்லை, உங்கள் உடலின் சுகாதாரத் தையும் பாதிக்கின்றது.
உயர் இரத்த அழுத்தமானது பாரிசவாதம், இருதயம் மற்றும் சிறுநீரக நோய்களையும் ஏற்படுத்தும். இவ் உயர் இரத்த அழுத்தத் தாலேயே உலகம் பூராவும் 1 பில்லியன் மக்கள் நோயாளியாகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.
குறைந்த பட்சம் 5 வருடம் விமான நிலையத்திற்கு அருகாமையில் வசித்தாலே உயர் அழுத்த நோய்க்கு அவர் ஆளாவார் என மருத்துவவியலாளர்களின் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 35 டெசிபிலுக்கு அதிகமான ஒலி உயர் இரத்த அழுத்தத்திற்கு வழி வகுக்கும் என ஐரோப்பிய அமைப் பொன்றினால் வெளியிடப்பட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
விமானங்கள் எழுப்பும் ஒலி ஒரு மனிதனின் நித்திரையை குழப்புகின்றது என்பது இங்கே முக்கியமான விடயமல்ல. ஒரு மனிதனின் நித்திரையை விமான ஒலி குழப்புகிறதோ இல்லையோ அவனுடைய இரத்த அழுத்தத்தை அதிகரிக்கும் என்பதே மருத்துவ அறிக்கையின் முக்கியமான உள்ளடக்கமாக விளங்குகிறது.

## "கவனத்தை ஈர்த்த" தமிழ் இளையோர்கள்

அவுஸ்திரேலிய தலைநகரான கன்பராவில் இந்திய- சிறிலங்கா அணிகளுக்கு இடையேயான துடுப்பாட்டப் போட்டியின் போது தமிழ் இளையோர்களால் கவனயீர்ப்பு நிகழ்வு நடத்தப்பட்டது.
கன்பராவில் உள்ள மனுகா ஓவல் மைதானத்தில் 17 வருடங்களுக்குப் பின்னர் இந்திய-சிறிலங்கா அணிகளுக்கு இடையேயான அனைத்துலக துடுப்பாட்டப் போட்டி கடந்த மாசி மாதம் 12ம் திகதி நடைபெற்றது.
இந்நிகழ்வில் பங்கேற்பதற்காக சிட்னி யிலிருந்து 160 பேரும், கன்பராவிலிருந்து 25 பேரும் மெல்பேர்ணிலிருந்தும் இளை யோர்கள் பங்கேற்றனர்.

இந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வு நடந்து கொண்டிருந்த போது தமிழ் இளையோர்கள் சிவப்பு வர்ண ரீ சேர்ட் அணிந்து அதில் ஈழம் வரைபடம் பொறிக்கப் பட்டு "Where is humanity?" "Voice of tamils" ஆகிய வாசகங்களை பொறித்திருந்தனர். அதேபோன்று கொடியிலும் ஈழம் வரைபடம் பொறிக்கப்பட்டு மைதானத்தைச் சுற்றிக் கொண்டிருந்தனர்.
மைதானத்தில் வாத்தியங்கள் வாசித்து அதன்மூலம் அங்கிருந்தவர்களின் கவனத்தினை இளையோர்கள் ஈர்த்தனர்.
இத்தகைய கவனயீர்ப்பு நிகழ்வுகளை சிறிலங்கா அணி பங்கேற்கவுள்ள எதிர்வரும் போட்டிகளில் நிகழ்த்த உள்ளதாகவும் இளையோர் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

சிட்னியிலிருந்து 350 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் கன்பராவுக்கு தமிழ்



இளையோர்கள் தமது சொந்தச் செலவில் சென்று இக்கவனயீர்ப்பு நிகழ்வினை நடத்தியிருந்தனர்.

## மொழிகள் எதிர்நோக்கும் பாரிய ஆபத்து

மாணவர்கள் இரண்டாம் நிலைக்கல்வியை பூர்த்தி செய்யும் வரை அவர்களுக்கு தாய் மொழி மூலமே கல்வி புகட்டவேண்டுமென்ற சிபார்சை தேசிய மொழி ஆணைக்குழு அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளது. சர்வதேச தாய் மொழித் தினமான பெப்ரவரி 21 இல் இலங்கை தேசிய மொழி ஆணைக்குழு வெளியிட்டிருக்கும் இடைக் கால அறிக்கையிலேயே இந்த சிபார்சு முன்வைக்கப்பட்டுள்ளது.
குறிப்பிட்ட சில தேசிய, சர்வதேச பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆங்கில மொழியில் மட்டுமே இடம் பெறுவதாக மொழி ஆணைக்குழு சுட்டிக் காட்டியிருப்பதுடன், பிள்ளைகளுக்கு அவர்களின் சொந்த மொழியிலேயே கல்வி வழங்க வேண்டுமென்ற அரசாங்கத்தின் கொள்கையை மீறுவோருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டு மென்றும் அழைப்பு விடுத்துள்ளது.

உலகில் தற்போது பேசப்பட்டு வரும் 6,700 மொழிகளில் அரைவாசிக்கு மேற்பட்டவற்றின் இருப்புக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் இவற்றில் சராசரி ஒரு மொழியென்ற ரீதியில் ஆண்டுதோறும் மறைந்துவிடுவதாகவும் அதாவது நடைமுறையில் பயன்படுத்தப் படாமல் அழிந்துவிடுவதாகவும் ஐ.நா. எச்சரிக்கை விடுத்திருக்கும் நிலையில், தேசிய மொழி ஆணைக்குழுவின் சிபார்சுகள் உண்மையிலேயே வரவேற்கப்படக் கூடியவையாகும். உலகிலுள்ள மொழிகளில் 96 சதவீதமானவற்றை பேசுவோர் இன்று சர்வதேச மக்கள் தொகையில் 4 சதவீதத்தினர் மட்டுமே என்று ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்துள்ளனர். இதற்கு உலகமயமாக்கலே பிரதான காரணமென சுட்டிக்காட்டப் படுகின்றது. மொழிகள் மக்களின் அன்றாட வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதவையாக உள்ளன. எந்தமொழியாக இருந்தாலும் அந்த மொழியின் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்துவதற்கு சிறப்பு நிபுணர்களின் ஆய்வுகள் தான் அவசியமென்றில்லை. ஏனெனில், மொழிகள் சகலரினதும் சமூக, பொருளாதார, கலாசார வாழ்வின் அடிநாதமாக விளங்குகின்றன.

காலனித்துவ ஆட்சியின் விளைவாக ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் கடந்த நூற்றாண்டில் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்ததும் கல்வி கற்பதற்கான மொழி மூலமாக இருந்ததுமான ஆங்கிலத்தின் முக்கியத்துவம் இன்றைய உலகமயமாக்கலினால் மேலும் அதிகரித் துள்ளது. இதனால் பல மொழிகள் பாவனையிலிருந்து மறைந்துவிடுவதற்கான அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளன. ஆண்டு தோறும் சராசரியாக மொழியொன்று மறைந்துவிடுகின்றதென்ற அதிர்ச்சியான தகவலைத் தெரிவித்திருக்கும் ஐ.நா.வின் கல்வி கலாசார விஞ்ஞான அமைப்பானது, (யுனெஸ்கோ) மொழிகளைப் பேணிப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளின் ஓரங்கமாக கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து இதுதொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சித்துள்ளது. புத்தாயிரமாம் ஆண்டு தொடக்கம் வருடாந்தம் சர்வதேச தாய்மொழித் தினம் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. இந்த வருட தாய் மொழி தினத்தின் கருப்பொருளாக 'பல மொழிகளின் தரத்தை மேம்படுத்து வதற்கான ஊக்குவிப்பு' என்ற விடயம் அமைய வேண்டுமென யுனெஸ்கோ வலியுறுத்தியிருந்தது.

தாய்மொழி என்பது எந்தவொரு சமூகத் தவராயினும் அவர்களின் உணர்வுகளுடன் ஒன்றிக்கலந்ததொன்று. இலங்கையில் பெரும்பான்மையினரின் மொழியான சிங்களம் 1956 இல் உத்தியோகபூர்வ மொழியாக்கப் பட்டதாலும் தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டதாலும் ஏற்பட்டிருக்கும் இழப்புகள் இன்னமும் முடிவின்றி தொடர்ந்து கொண்டிருக் கின்றன. சிங்களம் போன்று தமிழும் உத்தியோகபூர்வமொழியாக அரசியலமைப்பு ரீதியில் அந்தஸ்தை தற்போது பெற்றிருக்கின்ற போதிலும் உத்தியோகபூர்வ மொழி அமுலாக்கம் என்பது நடைமுறையில் இன்னமும் முழுமையாக சீர்படுத்தப் படவில்லை. எந்தவொரு மொழியென்றாலும் அதனை அழிந்துவிடாது பேணிப் பாதுகாக்க வேண்டும்.
ஐ.நா.வின் கல்வி, கலாசார, விஞ்ஞான அமைப்பின் (யுனெஸ்கோ) இந்த வருட கருப்பொருளாக 'மொழிகள் விவகாரம்' பிரகடனப்படுத்தப்பட வேண்டும் என்று யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் கொச்சிரோ மற்சு யூரா வலியுறுத்தி யிருந்தமை மிகவும் வரவேற்கத்தக்க விடயமாகும்.
சர்வதேச மக்களின் கல்வி, கலாசார , மொழி விவகாரங்களை பேணிப்பாதுகாப்பதற்காக உலக நாடுகள் பல ஒன்றிணைந்து உருவாக்கியிருக்கும் யுனெஸ்கோ போன்ற அமைப்புகள் உலகில் நடைமுறையிலுள்ள சகல மொழிகளையும் பேணிப் பாதுகாப் பதற்குரிய நடவடிக்கைகளை அந்தந்த மொழிகள் நடைமுறையிலிருக்கும் நாடு களுடன் கலந்தாலோசித்து மொழிகளை அழிந்துவிடாமல் பேணிப்பாதுகாப்பதற்கு தேவையான அடிப்படை வசதிகள், ஆலோசனைகளை சம்பந்தப்பட்ட நாடுகளின் அரசாங்கங்களுக்கு வழங்குவதே ஆக்க பூர்வமான நடவடிக்கையாகும் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

வடலியில் வெளிவரும் ஆக்கங்களுக்கு படைப்பாளிகளும் விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். வடலி எந்த வகையிலும் பொறுப்பேற்காது. வாசகர்கள் அனுப்பும் ஆக்கங்களை திருத்தியமைக்கவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரை நூற்றாண்டுக்கு முன் குடாநாட்டில்!.. - 13

- தி.ச.வரதர்

# அந்தக் காலத்தில் புகழ்பெற்ற வைத்தியர்கள்

**1920ம் ஆண்டில் இருந்து 1960ம் ஆண்டு வரையிலான 40 ஆண்டு காலத்தில் தமிழ்பிரதேசங்களில் குறிப்பாக யாழ்குடாவில் சமூக ஈடுபாடு, சமூக கட்டமைப்பு, வாழ்க்கை முறை, வாழ்வாதாரங்கள், போன்றவை எப்படி இருந்தன என்று இப்போது இருக்கும் பலருக்கு தெரியாது.**

**பொதுவாக அறுபது 70களில் இருந்த வாழ்க்கை முறையே தான் அதற்கு முன்பும் இருந்திருக்கும் என்று அவர்கள் என்ணுவார்கள். இது இயல்பே. ஆயினும் நிலமைகள் உண்மையில் எப்படி இருந்தன என்பதை ஈழத்தின் மூத்த எழுத்தாளர்களில் ஒருவரான திரு.தி.ச.வரதராசன் அவர்களின் நினைவில் மலர்ந்த சில சம்பவங்களின் ஊடாக வாசகர்கள் முன்கொண்டு வருகிறோம்**

பொன்னாலை என்ற எங்கள் கிரமத்துக்கு அந்தக் காலத்தில் புகழ் சேர்த்த பெருமை இரண்டு ஆயுர்வேத வைத்தியர்களும்முண்டு.

ஒருவருக்குப் பெயர் கந்தையா, மற்றவர் கணபதிப்பிள்ளை, இருவரும் சகோதரர்கள். கந்தையா மூத்தவர் ‘கந்தையா‘ என்றால் யாருக்கும் தெரியாது. ‘பரியாரி இராசா’ என்றால், இப்போதும்கூட வயதானவர்கள் பலரும் அறிந்திருப்பார்கள். அதே மாதிரிதான் அவருடைய தம்பி கணபதிப்பிள்ளையும் ‘பரியாரி பெத்தார்’ என்றால்தான் அவரைத் தெரியும்.

அந்தக் காலத்தில் பலருக்கும் இப்படி இரண்டு பெயர்கள் இருக்கும். ஒன்று இடாப்பு பெயர். மற்றது வீட்டுப்பெயர். பிறப்புப் பதியும்போது வைத்தபெயர்தான் இடாப்புப் பெயராக இருக்கும். இடாப்புப் பெயர் என்பது பள்ளிக்கூடத்து இடாப்பில் பதிந்த பெயர். அதுதான் சட்டப்பூர்வபெயர். ஆனால் சிறுவயது முதலே வீட்டிலே செல்லமாக வேறு ஒரு பெயர் வைத்துக் கூப்பிடுவார்கள். அநேகமாக அது பேரன், கொப்பாட்டனின் பெயராக இருக்கும். இடாப்புப் பெயர் ‘வேலாயுதம்’ என்றிருக்கும். பாடசாலையிலும் படிப்பு முடிந்து அவர் எதும் உத்தியோகத்தில் சோர்ந்தால் அலுவலகத்திலும் அவரை வேலாயுதம் என்றே அழைப்பார்கள். ஆனால் ஊர் முழுவதும் அவரை ‘சின்னராசா’என்ற வீட்டுப் பெயரால்தான் அழைப்பார்கள். ‘வேலாயுதம்’ என்று விசாரித்தால் பலருக்குத் தெரியாமலிருக்கும்.

‘பரியாரி பெத்தார்’ என்ற கணபதிபிள்ளை சற்று நாகரிகமானவர். அந்தக் காலத்திலேயே சிறிது ஆங்கிலம் கற்று மலேசியா சென்று அங்கே உத்தியோகம் பார்த்தவர். ஆங்கிலம் பேசுவார். மிடுக்கும், நாட்டாண்மைத்தனமும் அவருடன் கூடப் பிறந்தவை. இந்தக் குணத்தினால் போலும் உத்தியோகம் பார்த்த இடத்தில் அவரால் நிலைத்திருக்க முடியவில்லை. உத்தியோகத்தை துறந்து விட்டு ஊருக்கு வந்து தனது பரம்பரை தொழிலான வைத்தியத்தை படித்து, அதையே தொழிலாகக் கொண்டிருந்தார். எங்கள் ஊரில் செய்தித்தாள் படித்து உலகச் செய்திகளைப் பற்றி எல்லாம் சற்று விபரமாக கதைக்கிறவர் இவர் ஒருவராகத்தானிருந்தார்.

இரண்டாவது மகாயுத்தம் நடந்த காலத்தில் இவர் மிகவும் உற்சாகமாக கிட்லரின் வீரத்தைப் புகழ்ந்து பேசிக்கொண்டிருந்தார். பிற்காலத்தில் தியாகராஜ பாகவதருக்கும் எம்.ஜி. ஆருக்கும் உயிரையே கொடுக்கக் கூடிய ‘பக்தர்கள்’ இருந்ததுபோல, அப்போது கிட்லருக்கும் பல விசிறிகள் இருந்தார்கள். அவர்களில் பலர் ‘கிட்லர் மீசை’ வைத்திருந்தார்கள். பரியாரி பெத்தாரும் கிட்லர் மீசை வைத்திருந்தார். கிட்லரைப்பற்றி இப்போது வரலாறு படிக்கும் மாணவர்கள் தான் தெரிந்திருப்பார்கள். ஆனால் அப்போது கிட்லரைப் பற்றிக் கேள்விப்படாத மனிதர்களே இல்லையென்று சொல்லலாம்.
கிட்லரைப்பற்றி யாரும் குறைவாகப் பேசிவிட்டால் பரியாரி பெத்தாரிடம் தப்பமுடியாது!

பரியாரி இராசா மூத்தவர். அவருடைய வீடு எங்கள் வீட்டுக்கு முன்னால் ஒரு ஒழுங்கையில் இருந்தது. அவர் அதிகம் படித்தவரல்லர். ஏதோ வைத்திய வாகட நூல்களைப் படித்து அறிந்துகொள்ளக்கூடிய அறிவு இருந்தது போலும் இவர் இவர் தம்பியார் பெத்தாரைப் போல உலக விவகாரங்களெல்லாம் பேசமாட்டார். ஊர்க் கதைகள்தான் அவருக்கு. அதற்கும் அதிகமாக நேரமிருக்காது. அதிகாலையிலிருந்தே நோயாளிகளைப் பார்க்கும் வேலை அவருக்கு வந்துவிடும்.

இப்போதெல்லாம் ஏதாவது நோய் வந்தவுடன் மருத்துவமனைக்கு ஓடிப் போகிறோம். நடக்க முடியாத நோயாளிகளை வாகனங்களில் ஏற்றிச் சென்று மருத்துவர் முன் நிறுத்து கிறோம்.
அந்தக் காலத்தில் பெரும்பாலும் நோயாளி இருக்குமிடம் தேடி மருத்துவர் வருவார். அநேகமாக எல்லா ஊர்களிலும் இரண்டொரு வைத்தியர்கள் இருப்பார்கள். அந்த ஊர் மக்களின் நோய்களை அவர்களே தீர்த்து வைப்பார்கள்.
முற்றிப்போன சில பெரிய நோய்களுக்கு சில குறிப்பிட்ட ‘ஸ்பெஸலிஸ்டுகள்’ வெவ்வேறு ஊர்களில் இருந்தார்கள். அப்படியான நோயாளிகளை சற்று வசதியுள்ளவர்கள் மோட்டார் வண்டியிலோ, மாட்டு வண்டியிலோ ஏற்றிக் கொண்டு ‘சிறப்பு மருத்துவர்’ இருக்கும் ஊருக்குக் கொண்டு போவார்கள். சில சமயங்களில் அவரை அழைத்துவந்து நோயாளியைக் காட்டுவார்கள்.

நாயன்மார்க்கட்கு, ஒட்டகப்புலம், சதுமலை, சில்லாலை என்று இப்படி இன்னும் பல ஊர்களில் இப்படியான சிறப்பு மருத்துவர்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு நோய்க்கு ‘ஸ்பெஸலிஸ்ட்’

எங்களூர் பரியாரி இராசாவும் அத்தகைய சிறப்பு மருத்துவர்களில் ஒருவராக இருந்தார். ‘சன்னி’ நோய்க்கு பரியாரி இராசா மிகவும் புகழ் வாய்ந்த வைத்தியர். மிகத்தூர இடங்களிலிருந்தெல்லாம் ‘சன்னி நோய்க் காரர்கள் பொன்னாலைக்கு வருவதுண்டு.
நான் மிக சிறு வயதில் மோட்டர் வண்டியைப் பார்த்தது பரியாரி இராசா வீட்டுக்கு வந்த மோட்டார் வண்டியைத்தான். அவருடைய வீட்டுக்கு அடிக்கடி மாட்டு வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் வரும். சிலர் அந்த வண்டிகளில் பரியாரியாரைக் கூட்டிக்கொண்டு போவார்கள்.
அந்தக் காலத்தில் மோட்டார் வண்டிகள் மிக அருமை. மாட்டுவண்டிச் சில்லில் இருப்பதுபோல மரத்தினாலான சட்டங்கள் பொருந்திய சில்லுகளுடன் கூடிய அந்த மோட்டார்கள், ‘பாம் பாம்’ என்று தமது ரப்பர் பந்து பொருந்திய ‘கோணை’ அடித்துச் சத்தம் போட்டுக் கொண்டு, தெருப்புழுதியை அள்ளி விசிறிக்கொண்டு வரும்.
தூரத்தில் மோட்டார் வண்டியின் சத்தம் கேட்டால் கை அலுவலை அப்படியே விட்டுவிட்டு ஓடிவந்து படலையைத் திறந்து தெரு ஓரமாக நின்று நாங்கள் மோட்டார் வண்டியைப் பார்ப்போம்!
அது அப்போது ஒரு காட்சிப் பொருள்.

பரியாரி வீட்டருகே மோட்டார் வண்டி நின்றதும், ஆட்கள் இல்லாவிட்டால் கிட்டப்போய் புழுதிபடிந்து கிடக்கும் அதன் உடம்பில் எங்கள் ஒரு விரலினால் எங்கள் பெயர்களை எழுதி வைப்போம்.
இப்போதெல்லாம், புகழ்பெற்ற ‘டொக்ரர்’ களிடம் போய் ‘கியூ’வில் காத்திருந்து எங்கள் முறை வந்ததும் உள்ளே போய், எங்களுக்கு என்ன வருத்தம் என்ன குணம் குறி, எங்கள்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

Croydon Tutorial College
A CENTRE OF ACADEMIC EXCELLENCE
30-32 Southend, South Croydon, Surrey, CR0 1DN
Tel:020 8688 5777 Tel/Fax: 020 8688 5776
Email: admin@croydontutorialcollege.co.uk

Disappointing Results???
Enrol now for GCSE, GCE AS and A2
FULL TIME CLASSES
For November/January/June Examinations
Coaching by experienced tutors
Official Examination Centre for all UK's leading Exam Boards

- Physics
- Chemistry (Including Salters Chemistry)
- Biology
- Maths (Pure, Mechanics, Statistics)
- English
- ICT

- Accounts
- Further mathematics
- Modern Languages
- Business Studies
- Economics

GCSE REVISION
English
Mathematics
Physics
Biology
Chemistry
ICT/Computing
French/German/Spanish

- Life In the Uk
- ESOL
- IELTS

Classes already started only a few places left

Evening classes for Years 7, 8, 9, 10, GCSE, AS and A2.
Press fast forward to reach your potential
Visit our website - www.croydontutorialcollege.co.uk

South Harrow பகுதியில் GLOBAL VIDEO ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் புதிய உதயம்
Global Fresh Fish

அனைத்து வகையான தரமான இலங்கை இந்திய கடலுணவு வகைகளை மலிவாக நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள் உங்களின் எண்ணம் போல் வெட்டி சுத்தம் செய்தும் தரப்படும்
இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மீன்கள்
Opening Time: காலை 9.00 முதல் இரவு 7.00
தமிழ் DVD, Audio
பல வகையான நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்
சிறுவர்களில் இருந்து பெரியவர்கள் வரை உங்களுக்கு பிடித்த முறையில் சிகைஅலங்காரம் செய்துகொள்ள நாடுங்கள்.
Bureau De Exchange,
Cheque Cashing, Money Transfer

Uniglobe Exchange Ltd
230 Northolt Road
South Harrow
HA2 8DU
Tel: 0208 423 9988

Global Fresh Fish
230 B, Northolt Road
South Harrow
HA2 8DU
Tel: 0208 423 9938

Sutha Saloon
230 C, Northolt Road
South Harrow
HA2 8DU
Tel: 0208 864 4143

Global Home Entertainment
230 D, Northolt Road
South Harrow
HA2 8DU
Tel: 0208 423 7744

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலி

தொலைபேசி:
**020 8694 7412**

தொலைநகல்:
020 8694 7412

விளம்பரம்:
**020 8694 7412**

மின்னஞ்சல்:
Vadalee@lycos.co.uk

இணையம்:
www.vadalee.com

முகவரி:
**VADALEE**
**PO BOX - 24783**
**LONDON**
**SE13 7YE**

இப் பத்திரிகையை
மாதம் தோறும் தபாலில் பெறுவதற்கு
ஓர் ஆண்டு சந்தா 7.00 பவுண்கள்.
ஐரோப்பாவுக்கு 25 யூரோக்கள்

Cheque or Postal order
Payable to: VADALEE


# வாழ்க்கையில் வெற்றி எப்போது கிடைக்கும்?

மனிதர்கள் இந்த அவசர உலகத்தில் வாழ்க்கை பரபரப்புக்கும், போட்டிகளுக்கும் இடையே சிக்கி மனநெருக்கடியை அனுபவித்து வருகிறார்கள்.

பொறாமைப்படாமல் இருப்பது, துணிச்சலுடன் இருப்பது, நல்ல பொழுதுபோக்கு, நல்ல புத்தகங்களை வாசித்தல் இவற்றின் மூலம் ஓரளவு மனநெருக்கடியைப் போக்கி விடலாம். மனதைக் கவரும் எந்தத் தீய பொருளும் அருகில் இருந்தாலும் மனம் அதன் பக்கம் போகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இது எனக்கு நல்லதில்லை, என்று தெரிந்து நல்வழியில் மனதைச் செலுத்துவதுதான் வைராக்கியம்.

எவ்வளவுதான் திறமையாக இருந்தாலும், நல்ல மனசு இருந்தாலும் வாழ்க்கையில் ஒருமுறை மோசமான தீய நடவடிக்கைகளில் ஈடுபட்டு விட்டால் மீள்வது கடினம். மனித மனம் ஒரு தரிசு நிலம். அதை கலை, இலக்கியம், பெரியோர் வாக்குகள் பண்படுத்துகின்றன.

காற்றில் மாசு படிந்திருக்கிறது. அந்தக் காற்றைச் சுவாசித்தால் உடல் நலக்கேடு ஏற்படும். அந்தக் காற்றை வடிகட்டிச் சுத்தமான காற்றைச் சுவாசிக்க வேண்டும். ஓர் அழகான விளக்கு இருக்கிறது. அதைச் சுத்தமாகத் துடைத்து விளக்கேற்றினால் அந்த விளக்குச் சுடர் விட்டு ஒளிபரப்பும். அதுபோல் மனதில் கிடக்கும் பொறாமை, பேராசை, கலக்கம், கோபம், கடுஞ்சொல் இவற்றிலிருந்து விடுபட்டவரே நிம்மதியுடையவர்கள். மனம் சலனமற்று இருக்கும்பொழுதுதான் இன்ப சொரூபத்தை அடைகிறோம். இன்பம் நிம்மதியான மனத்தில் இருக்கிறது.

அரேபியாவில் இருந்த அரசன் தனக்கு வேண்டிய சில பொருட்களை மட்டும் ஒரு சிறு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு மற்ற எல்லாவற்றையும் தானம் செய்தான். பிறகு ஒரு மதகுருவைப் பார்த்து, இன்பம் எங்கே இருக்கிறது என்று கேட்டான். உடனே மதகுரு அவன் மூட்டையைப் பிடுங்கிக்கொண்டு ஓட ஆரம்பித்தார். அரசன் அவரைப் பின் தொடர்ந்து ஓடி மூட்டையை அவரிடமிருந்து பிடுங்கினான். உடனே மதகுரு, இன்பம் எங்கிருக்கிறது என்று இப்போது தெரிந்து கொண்டாயா? உன் மூட்டை கிடைத்ததும் அது நிம்மதியாகிவிட்டது. ஆக இன்பம் நிம்மதியான மனதில் இருக்கிறது என்றார்.

பாவங்களைச் செய்யாதிரு நல்லவற்றைச் செய்: மனதைச் சுத்தப்படுத்து: இவையே புத்தர் உபதேசமாகும். இதனால் நிம்மதி தானே அமையும்.

எப்போதும் உயர்ந்த விடயங்களைச் சிந்திப்பது, தன்னைப் பற்றியும் தான் சார்ந்திருக்கும் துறையைப் பற்றியும் உயர்ந்த அபிப்பிராயம் கொள்வது, இவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**பொறாமை, பேராசை, கலக்கம், கோபம், கடுஞ்சொல் இவற்றிலிருந்து விடுபட்டவரே நிம்மதியுடையவர்கள்**

தன்னம்பிக்கை இழந்தவர்கள் விரக்தி யடைகிறார்கள். இந்த விரக்தியே மன நெருக்கடியை உண்டுபண்ணுகிறது. இத்தகையவர்களுக்குப் பாராட்டு உரையைப் போல் வேறு எதுவும் உற்சாகமூட்டாது. முன்னேற்றத்தின் முதற்படி தன்னம்பிக்கை இழக்காமல் இருப்பது தான். நம்பிக்கையைப் பிறர் தர முடியாது. அது அவரவர் உள்ளத்திலேயே உற்பத்தியாக வேண்டும் என்பார்கள் காந்தியடிகள்.

மனநெருக்கடி நேரத்தில் நண்பர்களுக்குக் கடிதம் எழுதலாம். மனச் சோர்வுக்கு கடித மருந்து அனுப்பி அலுப்பைப் போக்கிய அரிய நண்பர்கள் பலரிருக்கிறார்கள். வலிக்கு ஒத்தடம் மாதிரி நாலு வார்த்தை நண்பர்கள் இதமாக எழுதினால் மனநெருக்கடி தீர்கிறது. மனசு லேசாகிறது.

உள்ளங்கள் உவகைகொள்ள, கவலைகள் கலைந்துபோக, மனதில் மகிழ்ச்சி நிறைய பிறந்த நாள் வாழ்த்துக்கள் அகவிருளை நீக்கி ஆனந்த மடையச் செய்யும். இந்த உலகத்தில் நமக்கு நேர்வது இரண்டே இரண்டு சோகங்கள் தான். ஒன்று நமக்குத் தேவையானது கிடைக்காதது. மற்றது நமக்குத் தேவையில்லாதது கிடைப்பது. சில நேரங்களில் வெற்றி, சில நேரங்களில் தோல்வி கிடைக்கலாம். இரண்டையும் சமமாகப் பாவிக்கும் மனம் வேண்டும். மறைகின்ற சூரியனே மீண்டும் உதிக்கும் என்னும் பழமொழியை நினைவுப்படுத்திக் கொள்ளலாம். உப்புப் பெறாத விடயத்தை ஊதி ஊதி பெரிதாக்கி மனதைக் குழப்பத்தில் ஆழ்த்தாமல் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. நல்லதையே நாம் செய்யும்போதுகூட அதற்கு வீம்பாக நமக்குத் தீமை செய்பவர் களும் உண்டு. களைகள் தண்ணீர் பாய்ச்சாமலே முளைக்கும். முதுகில் குத்துவோர்கள் குத்திக்கொண்டே இருப்பார்கள். அதையும் மீறி முன்னேறிக் காட்டுபவர்களும் இருக்கிறார்கள்.

சம்பாதிக்கும் பணத்தைக் கன்னாபின்னா என்று செலவழித்துப் பிறகு கஸ்டப்படக்கூடாது. சிக்கனம் இல்லையேல் மனத்தைச் சிக்கலாக்கி விடும் எனக்குப் பணத்தைச் செலவழிப்பதை விட அதைச் சம்பாதிப்பதும், அது கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்ந்து சேமித்துப் பிரம்மாண்டமாய் மாறுகிறதைப் பார்ப்பதும் தான் சந்தோசம் கொடுக்கிறது என்று சொல்கிறார் உலகக் கோடீஸ்வரர் ப.ஃபெட். ஒருமுறை சேமித்த தொகை இருமுறை சம்பாதித்த தொகைக்குச் சமம். சேமிப்பும் வழ்க்கை நெருக்கடியை விலக்குகிறது.
அவ்வையார் பாடுகிறார்,
எந்த ஒரு விடயத்திலும் பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்கும் மனப்பக்குவம் வேண்டும். அப்பொழுது தான் வெற்றி கிடைக்கும். வாழ்க்கை வாழ்வதற்குத்தான், அலுத்துக் கொள்வதற்கல்ல. கொஞ்சம் மனசு வைக்கவேண்டும். அதிகம் முயற்சி செய்யவேண்டும் கைமேல் பலன்தான்

**அ.இரத்தினசபாபதி**


# அம்பாள் ஜுவல்லர்ஸ்

- உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயர்ரக டிசைன்கள் உங்கள் எண்ணத்தை நிஜமாக்கி ஜெலிக்க வைக்கும் நேர்த்தியான தங்க நகைகள்
- கலை வண்ணத்தைப் பிரதிபலிக்கும் புத்தம் புது நகைத் தேர்வுகள்
- நெஞ்சில் இன்பத்தை விளக்கேற்றும் தங்க நகை அரங்கம் அம்பாள் ஜுவல்லர்ஸ்



Ambaal Jewellers
176 Upper Tooting Road
Tooting
London SW17 7ER
**Tel: 020 8672 9955**
**Fax: 020 8672 7097**


# பூமியை சூரியன் விழுங்கும் அபாயம்!

இன்னும் 760 கோடி ஆண்டுகளில் பூமியை



சூரியன் விழுங்கிவிடுமென வானியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.
இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது. சூரியன் தொடர்ந்து விரிவடைந்து கொண்டே வருவதால் ஏற்படும் அதிக வெப்பத்தின் காரணமாக பூமியிலுள்ள புல், பூண்டுகள் உள்ளிட்ட அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிடுவதுடன், கடல்கள் முற்றாக வற்றிப் போய்விடும்.

எனினும், அடுத்த நூற்றாண்டுகளில் ஏற்படும் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக ஒரு, சிறு கிரகத்தை புவி ஈர்ப்பு எல்லைக்குள் கொண்டுவந்து மோதவைத்து பூமியின் சுற்றுவட்டப் பாதையை மாற்றுவதன் மூலம் அழிவிலிருந்து பூமியையும் மனித இனத்தையும் காப்பாற்ற முடியுமென பிரித்தானியாவில் உள்ள சசெக்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானியல் நிபுணர் டொக்டர் றொபேர்ட் சுமித் தெரிவித்துள்ளார்.


# Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள் - Lewisham

**ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு.**




**தொடர்புகளுக்கு: பிரபா, Tel: 07749 051 394**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பிற்கு நல்லதொரு தீனி

ஏ.ஜே.ஞானேந்திரன், பாசல்

நாளிதள்கள் நாள்பட்டால் யாருக்கும் உதவாதவர் என்பது ஏதோ உண்மைதான். ஆனால் அச்சாகிக் கையில் வரும்போது, அவர் மவுசே தனி. ஆயிரக் கணக்கான இணையப் பக்கங்கள், பத்திரிகைகளை வெளியிட்டு வந்தாலும், அச்சாகி வரும் ஒரு பத்திரிகையை, கையிலெடுத்து, காலையில் முதல் வேலையாக அதை வாசிக்கும் போது, அதன் சுகமே, ஒரு தனிச் சுகம். இந்தப் பத்திரிகை பற்றி, இந்த வாரம் சில பயனுள்ள தகவல்களை அறிந்து கொள்வோம்.

பத்திரிகைகளுக்கு முன்னோடி நாடு எது என்பது விவாதத்திற்குரிய விடயம் ஆனாலும் ரோமர்களைத்தான் சொல்ல வேண்டும். அரச சுற்றறிக்கைளைக் கொண்ட பிரசுரங்கள், ஜூலியஸ் சீஸரினால், பொது மக்களுக்கு அறியத் தரப்பட்டுள்ளது. 'அக்ரா டினுமா' (Acta Diurna) என்று இவற்றை அழைத்திருக் கின்றார்கள். கற்களில் செதுக்கப்பட்டு அல்லது உலோகத் தகடுகளில் செதுக்கப்பட்டு, பகிரங்கமான இடங்களில், மக்களின் பார்வைக்கு வைத்திருக்கின்றார்கள்.
கி.மு. 713-734ம் ஆண்டு காலப் பகுதியில், ஆட்சியிலிருந்த, சீன மன்னர்கள், அரச செய்திகளை, பகிரங்கப்படுத்தி இருக்கின் றார்கள். பட்டுத் துணியில் இவை எழுதப்பட்டு, பின்பு, அரச அதிகாரிகளால், உரத்து வாசிக்கப்பட்டுள்ளன.

1582இல், மிங் (Ming) ஆட்சியின் போது, பெய்ஜிங் நகரில், தனியார் பத்ததிரிகைகளை வெளியட்டமைக்கு, சான்றுகள் காணப் படுகின்றன. 1638 அளவில், மரப் பலகைகளில் அச்செழுத்துக்களை வடிமைப்பதை மாற்றி, 'பெய்ஜிங் கசற்' கொண்டு செல்லக்கூடிய அச்செழுத்துக்களை உபயோகித்து, அச்சடிக்கும் முறைக்கு தாவியது.
ஆயினும் உலகப் பத்திரிகைக் குழுமம், 1605 இல் பிரசுரமாகிய, ஜேர்மனியர் ஒருவரது பிரசுரத்தையே, உலகின் முதற் பத்திரிகை யாகக் கணிக்கின்றது.

ஆங்கிலம் பேசுவோர் உலகத்திற்குள் நுழைந்தால், 1622 இல், நத்தானியல் பட்லர் (Nathaniel Butter) என்பவரின் முயற்சியில் வந்த பிரசுரந்தான், பத்திரிகை களின் முன்னோடி. ஆரம்ப பத்திரிகைகள், வெறும்




அரசியல் நிகழ்வுகளையே அலசி வந்தாலும், 1702 இல் தான் ' த டெய்லி கரண்ட்' (The Daily Courant) என்ற பெயரில், பல நிகழ்வுகளும் அடங்கிய ஒரு தினசரி பிரசுரமாகியது.
1690இல் பென்சமின் கரீஸ் (Benjamin Harris) என்பவரால் 'பப்பிளிக் ஒக்கறன்ஸ்' (Public Occurances) என்ற பெயரில், பொஸ்டன் நகரில் பிரசுரித்த பத்திரிகைதான், அமெரிக்க காலனித்துவ நாடுகளுக்கு, முதல் பத்திரிகை. 1704 இல் 'பொஸ்ரன் றியுஸ் லெட்ரர்' (Boston News Letter) என்ற பெயரில் வெளியாகிய பத்திரிகை, இந்த அமெரிக்க காலனித்துவ நாடுகளில், தொடர்ச்சியாக வெளிவந்த பத்திரிகை, என்ற பெருமையைப் பெறுகின்றது. 1783இல் அமெரிக்காவில் பென்லில்வேனியா மாவட்டத்தில் அறிமுகமாகிய ஈவினிங் போஸ்ட் (Evening Post) என்ற செய்தித்தாள் தான், அமெரிக்காவின் முதற் தினசரி.
கனடாவிலோ, 1751இல் 'கலிபக்ஸ் கசற்' (Halifex Gazette) என்ற பத்திரிகை, முதற் தடவையாகப் பிரசுரமாகியது.
அச்சுப் பதிப்பில், பல முன்னேற்றங்கள் கண்ட நிலையில், நவீன பத்திரிகைகளின் முன்னோடியாக 'த ரைம்ஸ் ஒவ் லண்ட'னைக் (The Times of London ) கூறலாம். 1814இல், ஒரு நிமிடத்திற்கு 1100 பிரதிகளை அச்சிடக்கூடிய, அச்சு இயந்திரங்களை, இவர்கள் அறிமுகம் செய்துள்ளார்கள். வெகு விரைவில், ஒரே சமயத்தில், இரு பக்கங்களிலும் அச்சிடக்கூடிய முறையில், மாற்றம் செய்யப்பட்டன. இந்த அரிய கண்டுபிடிப்பு, பத்திரிகைளின் விலையைக் கணிசமாக் குறைத்தமையோடு, மக்களில் பலரைச் சென்றடையும் வாய்ப்பையும் தேடிக் கொடுத்தன.

1833இல் 'பென்சமின் டே' (Benjamin Day) என்பவர், முதலாவது 'பெனி பிறஸ்' (Penny Press) பத்திரிகையை அறிமுகம் செய்தார். பத்திரிகையின் பெயர் 'த நியுயொர்க் சண்' (The New York Sun) இங்கு அச்சாகும் பத்திரிகைகள், ஏனைய பத்தரிகைகளின் விலைகளை விட, ஆறிலொரு பகுதிக்கே விற்பனையாகியமை இதன் சிறப்பம்சமாகும். இப்படி வளர்ந்ததுதான் இந்தப் பத்திரிகைகள். மஞ்சள் பத்திரிகைகளும் 19ம் நூற்றாண்டில், அமெரிக்காவில் ஆரம்பித்த இந்த வகைப் பத்திரிகைகளே. மக்களுக்கு செய்திகளைக் கொடுப்பதைத் தவிர்த்து, மக்களின் உணர்ச்சிகளுக்கு தீனி போட்டு, அவர்களைக் கோபப்படுத்துவதில் அல்லது பரவசப் படுத்துதலில் குறியாக இருந்திருக்கின்றன. இன்றும் இந்த வகைப் பத்திரிகைகள் இருக்கவே செய்கின்றன.
வாசிப்பை என்றும் நேசிப்போம்

## திருமலையில் டெங்கு பரவுகிறது இதுவரை மூவர் உயிரிழப்பு!

திருகோணமலையில் டெங்கு நோயின் தாக்கமும் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருடங்களுடன் ஒப்பிடு கையில் இவ்வருட ஆரம்பத்திலேயே அதிகமான நோயாளிகள் இனம் காணப் பட்டுள்ளதுடன் 3 நோயாளிகள் இந்நோயால் இறந்துள்ளனர் என சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நோயைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் தங்கள் ஆதரவையும், பங்களிப்பையும் நல்க வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரி வேண்டு கோள் விடுத்துள்ளார்.

**USHANI**
**Caterers**

**Excellent Quality Food Products for Supermarket Chains in the UK & Europe**





**Specialist in North/South Indian, Sri Lankan, Chinese & Thai Cuisine**
**Noon House**
**34-38 Steele Road, Park Royal, London NW10 7AS**
**Tel: 020 8838 4757 Mob: 07867 911 591**
**0800 195 99 75**
**www.ushanicaterers.com**





**Free Surprise Dish for Every Catering Orders**

எமது உணவு வகைகள் அனைத்தும் அதியுயர் சுகாதரமுறைப்படி தயாரிக்கப்படுகிறது

நீங்கள் விரும்பும் உணவு வகைகளுடன் அரங்கேற்றம், கல்யாணம் போன்ற வைபவங்களுக்கு தேவையான அழைப்பிதழ், மண்டப அலங்காரம், வீடியோ, போட்டோ, போன்ற ஏனைய தேவைகளும் உங்கள் மனமகிழ்வுக்கு ஏற்ப செய்துதரப்படுகிறது.

**ஓம் ஸ்ரீகருமாரி அம்மன் ஜோதிட நிலையம்**

**இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள** SB **லக்ஷ்மணாராஜூ குருஜூ** Aadivasi General Secretary (Face Reading) Durga Poojari **திருமதி சுபலக்ஷ்மி அவர்கள் கைரேகை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை பற்றிய விபரங்களை தமிழில், தெலுங்கில், ஆங்கிலத்தில் கூறுவார்.**





**துல்லியமாக கணித்து பார்க்கப்படும் விடயங்கள் (Astrology)**

★ கணவன் மனைவி ஒற்றுமையின்மை
★ கைரேகை, முகநாடி, வசியப்பொருத்தம், பஞ்சாங்கம் பார்த்தல்
★ திருமணயாதகம், குறிப்பு பொருத்தம், வசியம், ஆண். பெண்
★ வாஸ்து சாத்திரம், நாட்டில் ஏனைய பிரச்சினைகள்
★ தொழில் வியாபார லட்சுமிகரம் விடயமான வசியப்பொருத்தம்
★ எதிரிகள், கண்திருக்ஷ்டி , கோட் வழக்குகள்
★ வாகனப்பொருத்தம் லட்சுமி வசீகரம்
★ பெண்பிள்ளைகள் ஒற்றுமையாக பெற்றோருடன் நிலைத்திருத்தல்
★ பிரிந்தவர் ஒன்றுகூடுதல் எங்கு இருந்தாலும்
★ கிரகப் பிரவேக்ஷம் - லட்சுமி பூசை- குரு பூசை

**ஆயுர் வேத வைத்திய ஆலோசனை**
இரத்தக்கொதிப்பு, நீரழிவு, தொய்வு போன்ற அனைத்து வியாதிகளுக்கும் ஆலோசனை வழங்கப்படும்

ஆகியவை நல்ல முறையில் கணித்தும் பூசை செய்தும் விபரங்கள் குருஜி ஆசீர்வாதத்துடன் செய்து தரப்படும்
*இவர் நியுசிலாந்து பாரீஸ், ஜேர்மனி, சிங்கப்பூர், மலேசியா, சுவிஸ் மற்றும் பல உலகநாடுகள் எங்கும் விஜயம் செய்துள்ளார்.*

**F.C.C Super Store**
**Manor Park,**
**244-246 High Street North,**
**London E12 6SB**

**Mobile:**
**07852 506 993**
**07983 204 697**
**020 8470 6564**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை புலவர் அகிலேசபிள்ளையின் நூல் வெளியீட்டு விழா!

இற்றைக்கு 154 ஆண்டுகளுக்குமுன்பு திருக்கோணமலையில் பிறந்து வாழ்ந்த புலவர் அகிலேசபிள்ளை அவர்களால் இயற்றப் பட்டிருந்த ஈழத்து சைவ வரலாற்றோடு பின்னிப் பிணைந்த சான்றுகளின் பதிவுகளாக அமைந்திருக்கும் ஐந்து நூல் திரட்டுக்களின் தொகுதி ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கையம்மன் ஆலய கலாச்சார மண்ணடபத்தில் கடந்த 01.3.2008 சனிக்கிழமை வெளியிட்டு வைக்கப் பட்டது.

வழமைக்குமாறாக மண்டபத்தில் கூட்டம் குறைந்தே காணப்பட்டது. இருந்தாலும் இலக்கியதாகமும் அறிவியற் சிந்தனையும் உடையவர்கள் பலர் சமூகமளித்திருந்தனர்

வெளியீட்டு விழாவில் புலவர் அகிலேச பிள்ளை எழுதிய திருக்கோணை நாயகர் பதிகம், வெருகல் சித்திரவேலாயுத சுவாமிபேரில் சிறைவிடுதூது, திருக் கோணமலை விசாலாட்சியம்மை பெருங் கழிநெடில் விருத்தம், திருக்கோணமலை வில்லூன்றி கந்தசுவாமி பத்துப்பதிகம், கண்டியிலிருந்த நரேந்திரசிங்கராஜன் வசந்தன் சிந்து, ஆகிய ஐந்து நூல்கள் வெளியிடப் பட்டன.

நூல் வெளியீடு பாவலர் கந்தையா இராஜமனோகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந்நூல்கள் போன்ற அழியாச் செல்வங்களைத் தேடிக்கண்டுபிடித்து எவ்வளவு முயற்சிசெய்தாவது பாதுகாப்பதும் அவற்றின் வரலாறுகளை, பின்னணிகளை, உண்மைகளை நம் இளைய சந்ததிக்கு கடத்துவதும் நமது தலையாய கடமையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். வாழ்த்துரை ஸ்ரீகனக பாலகுமாரக்குருக்கள் வழங்கினார். ஆலய நிர்வாகக் குழுத்தலைவர் யோகநாதன் நூலின் அழகையும் வரலாற்றையும் பாராட்டி பேசினார். நூல் ஆய்வுசெய்த நூலகவியலாளர் திரு.செல்வராஜா 1870லிருந்து ஆய்வுகளின் தரவுகளைச் சுட்டிக்காட்டி இந்த நூலைப் பதிப்பிக்க எடுத்தமுயற்சிகளை எடுத்து விளக்கினார்.


கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பிரிவு முன்னாள் தலைவர் கலாநிதி திரு பாலசுகுமார் அவர்கள் திருகோணமலையின் புவியல்ரீதியான அமைப்புக்களையும், திருக்கோணமலையின் கடல்வளம் நிலவளங்கள் பற்றிய சிறப்பையும் இந் நூல் திரட்டு படைத்த மாபெரும் அறிஞர்களின் தரத்தையும் ஈழத்து இலக்கியவரலாற்றின் பூர்வீகத்தையும் சில ஆழமான வராலாற்றுப் பாடல்களையும் நூலின் பின்புலத்தையும் அதன் சிறப்பையும் அழகாக எடுத்துரைத்தார்.

ஜெர்மனி 'கஅம்' காமாட்சியம்பாள் ஆலய ஆதீனகர்த்தா பிரதிஷ்டகலாநிதி சிவஸ்ரீ ஆறுமுகபாஸ்கர குருக்கள் மிகப்பக்குவமாக நூலின் சிறப்பான பகுதிகளை ஆராய்ந்து பாடினார். சிவத்தமிழ் ஆன்மீக கலாண்டிதழின் இணையாசிரியர் திரு புவனேந்திரன் நூலின் அழகையும் அதன் அட்டைப் படத்தையும் பாராட்டி தனது உரையை சுருக்கமாக முடித்துக்கொண்டார். இறுதியிலே ஆலய நிர்வாகக்குழுச் செயலாளர் அனைவரையும் வாழ்த்தி நன்றி தெரிவித்தார்.

- தொகுப்பு ஈழ இலக்கியன்

# மகரிசி மகேஷ் யோகி காலமானார்

மேலை நாடுகளில் ஆழ்நிலை தியான முறையை அறிமுகப்படுத்திய இந்தியாவைச் சேர்ந்த ஆன்மிகத் தலைவர் குரு மகரிஷி



மகேஷ் யோகி (91) மாசி மாதம் 5-ம் திகதி காலமானார்.

நெதர்லாந்தின் விலாட்ராப் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை மாலை உறக்கத்தில் இருந்தபோது அவரது உயிர் பிரிந்தது.

கடந்த மாதம் ஓய்வு பெறுவதாக அறிவித்த மகரிஷி விலாட்ராப் இல்லத்தில் ஓய்வு எடுத்துவந்தார்.

மத்தியப் பிரதேசத்தில் பிறந்தவர் மகேஷ் யோகி. அவரது இயற்பெயர் மகேஷ் பிரசாத் வர்மா. அலாகாபாத் பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் பட்டம் பெற்றார்.

இயல்பியல் துறை நிபுணராக இருந்து ஆழ்நிலை தியான முறையில் ஈடுபாட்டை வளர்த்துகொண்ட மகேஷ் யோகி, பண்டைய வேத நூல்கள் தியானங்கள் பற்றி தெரிவித்த விடயங்களை சேகரித்து ஆழ்நிலை தியான இயக்கத்தை ஏற்படுத்தினார். அதை உலகெங்கும் பரப்பினார். அதைத் தொடர்ந்து உலகெங்கிலும் அவருக்கு ஆதரவாளர்கள் பெருகினர்.

சுமார் 60 லட்சம் பேர் அவரது சீடர்களாக உள்ளனர். ஆஸ்திரேலிய பாடகர் டோனோவான், அமெரிக்க நடிகர் கிளின்ட் ஈஸ்ட்வுட், 'அவாந்த்கார்ட' திரைப்பட தயாரிப்பாளர் டேவிட் லிஞ்ச் உள்ளிட்டோர் அவரது சீடராக விளங்கும் பிரபலங்களில் அடங்குவர்.

1959-ல் மேலை நாடுகளில் ஆழ்நிலை தியானத்தை மகரிஷி அறிமுகம் செய்தார். இது மக்கள் மத்தியில் மிகவும் வரவேற்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து இங்கிலாந்தின் 'பீட்டில்ஸ்' இசைக்குழுவினர் இந்தியாவுக்கு 1968ல் வந்து இமாலயத்தில் உள்ள மகரிஷியின் ஆசிரமத்திலேயே ஆழ்நிலை தியான முறையை பயின்றனர்.

# நெப்போலியன் இறந்தது எப்படி?: ஆராய்ச்சியில் புதிய தகவல்

பிரான்ஸ் நாட்டின் முன்னாள் பேரரசர் நெப்போலியன், உணவில் விஷம் வைத்துக் கொல்லப்பட்டார் என்று கூறப்படும் பரவலான தகவல் உண்மையல்ல என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.



பிரான்சின் மிகவும் புகழ்பெற்ற பேரரசனாக விளங்கிய மாவீரன் நெப்போலியனை, பிரித்தானிய படை, வோட்டலூ என்ற இடத்தில் 1815-ம் ஆண்டு தோற் கடித்தது. பின்னர் அவர் கைது செய்யப் பட்டு, செயின்ட் கெலினா என்ற தீவில் சிறை வைக்கப் பட்டார். 6 ஆண்டுகள் கழித்து தனது 52 வது வயதில் அங்கேயே அவர் இறந்தார்.

அவரது தலைமுடி பாதுகாக் கப்பட்டு வருகிறது. அந்தத் தலைமுடி 1961 -ல் ஆராயப் பட்டது. அதில் விஷம் இருந்தது தெரியவந்தது. இதையடுத்து நெப்போலி யனை பிரித்தானிய அரசு விஷம் வைத்துக் கொன்றிருக்கலாம் என்று தகவல் பரவியது.

தற்போது இத்தாலி நாட்டு விஞ்ஞானிகள், அணுசக்தியைப் பயன்படுத்தி, நெப்போலியனின் முடியை மிகத் துல்லியமாக ஆராய்ந் தனர். நெப்போலியனைக் கொல்லும் அளவுக்கு அவரது முடியில் விஷம் இல்லை என்று அவர்கள் முடிவுக்கு வந்தனர். அவர் சிறுவனாக இருந்தபோது அவரது முடியில் எந்த அளவுக்கு விஷத்தன்மை இருந்ததோ அதே அளவு விஷத் தன்மை தான் அவர் இறக்கும்போதும் அவரது முடியில் விஷத் தன்மை இருந்தது என்றும் இத்தாலிய விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எனவே நெப்போலியன் வயிற்று புற்றுநோயால் இறந்தார் என்று ஏற்கெனவே கூறப்பட்டுவந்த வாதத்துக்கு தற்போதைய முடிவு வலு சேர்த்துள்ளது.


BABAS PARTY WORLD U.K

- மணவறை, மண்டப அலங்காரம்
- உடன் பூ வடிவமைப்புகள்
- இந்திய மாலைகள்
- சகல வைபவங்களுக்கும் ஏற்ப பெயர் பொறிக்கப்பட்ட பலுன்கள்
- உணவு மற்றும் சூடாக்கும் உபகரணங்கள்
- சகல விதமான அழைப்பு அட்டைகள்
- புகைப்படம் மற்றும் வீடியோ வசதிகள்
- மண்டபம் ஒழுங்குசெய்தல்
- DJ இசை, நேரடி பாடகர் பாடல், மற்றும் டிஸ்கோ ஒளி அமைப்புகள்,
- Cake மற்றும் பரிசுப்பொருட்கள்

எமது இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

எமது விற்பனை நிலையத்தில் .....

நவநாகரீக உடைகள் ஆபரணங்கள்
பூசைப் பொருட்கள்
ரீ சேட்டுகள் மற்றும் தையல வேலைகள்
அலுவலக பொருட்கள்

20 Loampit Hill
Lewisham
London SE13 7SW
Tel: 020 8694 9404


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் சண்டை, குழந்தைகளை கடுமையாக பாதிக்கும்

குடும்பத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள், பிரச்சினைகள் பெரியவர்களை தான் பாதிக்கும் என்பது பெரும்பாலானோரின் கருத்து. குழந்தைகளைப் பற்றி கவலைப் படுவதில்லை. ஆனால் உண்மை அப்படி அலல. பெரியவர்களுக்கு எந்தளவுக்கு பாதிப்பு ஏற்படுமோ, அதேப் போல குழந்தைகளும் நிச்சயம் பாதிக்கப்படுகிறார்கள். குழந்தைகள் கண்முன்னால் பெற்றோர் சண்டையில் ஈடுபடுவது, மோசமான வார்த்தைகளால் ஒருவரை யொருவர் திட்டிக் கொள்வது உள்ளிட்ட செயல்களில் ஈடுபடும் போது குழந்தைகளின் மன நிலை வெகுவாக பாதிக்கப்படுகிறது. அதன் எதிரொலியாக அவர்களின் நடத்தையிலும் பெரிய மாற்றங்கள் உண்டாகும்.

உதாரணத்துக்கு, பெற்றோர் சண்டை போட்டுக் கொள்ளும் போது உறவினர்களைப் பற்றி வார்த்தைகளால் அர்ச்சிக்கும் பட்சத்தில், குழந்தைகள் அந்த உறவினர்களை அடியோடு வெறுக்கத் தொடங்கும். இணக்கமாக வாழ வேண்டியதன் அவசியம் புரியாமல் போகும். நிம்மதி பறிபோவதால் குழந்தைகளுக்கு படிப்பில் நாட்டம் குறைந்து குறைந்த மதிப்பெண்களை எடுக்க ஆரம்பிப்பார்கள். விட்டுக் கொடுக்கும் மனப்பக்குவம் நீங்கும். அவர்களின் மனோபாவம் பாதிக்கப்பட்ட இக்கால கட்டத்தில் கெட்ட நண்பர்களின் சகவாசம் கிடைக்குமானால் அவர்களின் கெட்டப் பழக்க வழக்கங்கள் இவர்களுக்கும் தொற்றி விடும். பெற்றோர் சண்டை போட்டுக் கொண்டு ஒருவருக்கொருவர் பேசாமல் இருப்பதும் அல்லது ஒருவர் மீது ஒருவருக்கு உள்ள கோபத்தில் குழந்தைகளை ஜாடை மாடையாக திட்டுவது, கண்மூடித்தனமாக உதைப்பது, திட்டுவது போன்ற செயல்களும் பிஞ்சு மனதில் பூகம்பத்தை உண்டாக்கும். பெற்றோர்கள் கண்மூடித்தனமாக சண்டை போட்டுக் கொள்வதை நேரில் பார்க்கும் குழந்தைகளின் மண வாழ்க்கை சிறப்பாக அமையாது. சமுதாயத்துடன் இணைந்து வாழப் பிடிக்காமல் ஒதுங்கி இருப்பார்கள். இன்னொரு முக்கியமான விடயமும் உள்ளது. மனஸ்தாபம் காரணமாக பெற்றோர்கள் பிரிந்து விடும் சூழ்நிலையில் குழந்தைகளின் கதி இன்னமும் மோசமாகும்.

## Life in the UK பரீட்சை உதவி வகுப்புகள்
## Lewisham

பிரித்தானிய குடியுரிமை பெற Life in the UK என்னும் பரீட்சையில் சித்தி அடைந்து இருக்கவேண்டியது அவசியமாகும். இதற்கான வகுப்புகள் லூாசியத்தில் (Lewisham) இரு இடங்களில் நடைபெறுகின்றன.

ஒவ்வொருவரின் கற்றல் திறமைகளும் வேறுபடுவதால் அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப வகுப்புகள் நடைபெறுகின்றன. கணனியில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. உங்களுக்கு வசதியான நேரத்தை தெரிவுசெய்து தனி வகுப்புகளை ஒழுங்கு செய்து கொள்ளலாம். துரித மிட்டல் வகுப்புகளும் உண்டு. விரும்பினால் உங்களுக்கு தேவையான பகுதியை மாத்திரம் படித்துக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு: பிரபா Tel: **07749 051 394**

## Tamils Health Organization United Kingdom (THO-UK)

*is organising an*
*Indoor Sports Festival for young and adults.*

**Date of event: Sunday, 20th April 2008**
**Venue: Sports Centre,**
**Dulwich College,**
**College Road**
**London, SE21 7LD (Car Park at Dulwich College)**



*The events are*

- Badminton
- Atro turf 7-A side football
- Netball Championship
- Karate Championship
- Chess Championship
- Swimming Championship



The participants of Badminton, Karate, Chess and Swimming should submit their application in Single event application form (if the participant participate in two events, he/she should submit two separate application forms). Indoor football and Badminton (double or team) should be submitted their application as a team application.

For further information: Dr Puvi - 079 8492 4502.
Download your entry form
Web site: www.tamilshealth.com, email: info@tamilshealth.com

Aims

*To promote health and fitness among the Tamil community in the UK. A Lack of exercise increases the risk of obesity, high blood pressure, diabetes and coronary heart disease.*

•

*All proceeds will go towards go towards the "**EMERGRNCY MEDICAL FOUND**".*

Closing Date for entries 7th April 2008


# Perma
*International Shipping Ltd*

*Shipping & Airfreight Worldwide Destinations*
*Traveling & Ticketing*
*Import & Export*
*Packing & Crating*
*Collection & Delivery*
*All sizes &Weights*
*Immediate & Insurance Cover*
*Complete Documentation Service*

✪ உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள்
✪ வாகனங்கள்
✪ வீட்டுப் பாவனைப்பொருட்கள்
✪ இயந்திர உபகரணங்கள்

❖ இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூருக்கு விசேட கழிவு
❖ ஏற்றுமதி
❖ இறக்குமதி
❖ களஞ்சியப்படுத்துதல்
❖ ஒழுங்குகள் செய்தல் யாவற்றிற்கும்

திறந்த **Car Park**
பிரமாண்டமான களஞ்சியம்

உங்கள் பொருட்களை இங்கு வந்தும் Pack செய்துகொள்ளும் வசதி உண்டு
உங்கள் இல்லம் வந்து Collcect செய்யும் சேவை உண்டு

**Over 35 Years Experience**

**Door to Door or Door to port service**

**Web: www.permainternational.co.uk**
**E-mail: info@ permainternational.co.uk**

*COLLECTION POINTS*
** Milton Keynes*
** North London*
** East London*

**இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும்**

**தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ பொருட்களை அனுப்ப விரும்புகிறீர்களா? தரமான, பிரத்தியேக சேவைக்கு நாடவேண்டிய இடம்**

தொடர்புகளுக்கு............ மோகன், பேர்சி, சிவம்

**45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL**
**Tel: 020 8646 5222, Fax: 020 8646 5557, Mobile: 07939550397**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊடகவியலாளர்களுக்கு மிகவும் ஆபத்தான நாடுகள் பட்டியல்: 3 ஆவது இடத்தில் சிறிலங்கா

உலகிலேயே ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதற்கு மிகவும் ஆபத்தான நாடுகளின் பட்டியலில் சிறிலங்கா மூன்றாவது இடத்தில் உள்ளதாக பிரான்ஸ் நாட்டைத் தளமாக கொண்டியங்கும் உலக பத்திரிகைகள் அமைப்பு தனது 2007 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த வருடம் சிறிலங்காவில் 6 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். சோமாலியாவில் 8 பேரும், ஈராக்கில் 44 பேலும் கொல்லப்பட்டுள்ளனர். உலக அளவில் கடந்த ஆண்டு 95 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறிலங்காவில் கடந்த வருடம் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் "புலிகளின் குரல்" வானொலி நிலையம் மீது நடைபெற்ற வான் தாக்குதலில் கொல்லப்பட்ட 3 ஊடகவியலாளர்களும் அடங்குவர். அவை தவிர "சாளரம்" சஞ்சிகையின் ஆசிரியர், "உதயன்" பத்திரிகையின் ஊடகவியலாளர், "நிலம்" சஞ்சிகையின் ஊடகவியலாளர் ஆகியோரும் கடந்த ஆண்டு கொல்லப்பட்டுள்ளனர்.

*1998 ஆம் ஆண்டுக்கு பின்னர் 2006 ஆம் மற்றும் 2007 ஆம் ஆண்டுகளிலேயே அதிக எண்ணிக்கையிலான ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 2006 ஆம் ஆண்டில் 110 ஊடகவியலாளர்களும், 2005 ஆம் ஆண்டு 58 பேரும், 2004 ஆம் ஆண்டு 72 பேரும், 2003 ஆம் ஆண்டு 53 பேரும் கொல்லப்பட்டுள்ளனர்.*

பெரும்பாலான ஊடகவியலாளர்களின் கொலை தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 9 வயது யானை கர்ப்பமாக இருப்பதற்கு விலங்குகம் உரிமைக்குழுவினர் எதிர்ப்பு

ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் உம்ள மிருகக்காட்சி சாலையில் பாதுகாக்கப்பட்டு வரும் ஆசிய யானை ஒன்று கர்ப்பமாக இருக்கிறது. இதை அந்த மிருகக்காட்சி சாலை ஆரவாரமாக கொண்டாடியது. அந்த யானைக்கு வயது 9 தான் என்பதை அறிந்ததும், விலங்கின உரிமைக்குழுவினர் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர்.

11 வயது வந்த பிறகே யானை கர்ப்பம் அடைய அனுமதிக்க வேண்டும். அதற்கு முன்பாக 9 வயதில் உள்ள குட்டியானை கர்ப்பம் அடைய அனுமதித்து இருப்பது 12 வயதுச்சிறுமி ஒருத்தி கர்ப்பம் ஆனதற்கு சமமாகும் என்று அந்த அமைப்பு கண்டனம் தெரிவித்து உள்ளது.

மிருக நலனுக்கான சர்வதேச நிதியின் ஆசிய பசிபிக் டைரக்டர் 'எரிக்கா மார்ட்டின்' கூறுகையில், மிருகக்காட்சி சாலை நிர்வாகம் பொறுப்பில்லாமல் நடந்து கொண்டு உள்ளது என்று குற்றஞ்சாட்டினார்.

மிருகக்காட்சி சாலையில் யானை குட்டி போடுவது, குட்டிஉயிருக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியது என்றும் அவர் தெரிவித்தார்.

'தாங் டீ' என்ற அந்த யானை தாய்லாந்து நாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட 8 யானைகளில் ஒன்று ஆகும். இவை 2006-ம் ஆண்டு நவம்பர் மாதம் தாய்லாந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. அது தான் இப்போது 5 மாதகர்ப்பிணியாக இருக்கிறது. பொதுவாக யானைகளின் பிரசவ காலம் 22 மாதங்கள் ஆகும்.

## முந்துதல் வேண்டாம்

கணவனுக்கு ஒரு பிரச்சனை. அது மனைவியையும் கூடப் பாதிக்கிறது. ஆனால், இருவருமே வெளிப்படையாகப் பேசத் தயங்குகிறார்கள். அது என்ன பிரச்சினை? 'என ஒரு விடுகதை போட்டால் உங்களால் அவிழ்க்க முடியுமா ?

விந்து முந்துதல். இதுதான் ஆண்களை மிக அதிகமாகப் பாதிக்கும் பாலியல் பிரச்சினையாகும். இதனால், தங்கள் ஆண்மையே பாதிப்புக்கு உள்ளாகி விட்டதாகவும் மனைவியைத் திருப்திப்படுத்த முடியவில்லையே எனவும் பல ஆண்கள் மனம் புழுங்குகிறார்கள். இயலாமையால் மனப்பதற்றம், சோர்வு போன்றவற்றுக்கும் ஆளாகிறார்கள். அதேநேரம், அவர்கள் மனைவிமாரோ 'இவர் தன்ரை வேலை முடிந்ததும் நடையைக் கட்டி விடுகிறார். என்னைக் கவனிப்பதில்லை' என மனத்திற்குள் சினம் எழத் தவிக்கிறார்கள். மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இருவருமே துன்புறுகிறார்கள்.

இது ஒரு பரவலான பிரச்சினை ஆன போதும் இதற்கான அடிப்படைக் காரணம் தெளிவாகப் புரியவில்லை. இருப்பினும் உயிரியல் காரணங்களும் மனோவியல் காரணங்களும் இணைந்தே இருப்பதை வைத்தியர்கள் உணர்கிறார்கள். இதனால்தான், இதற்கான சிகிச்சையும் கூட பல் வழிப்பட்டதாகவே அமைகிறது.
உறவின் போது நிதானத்தைக் கடைப்பிடித்து, செயல் முறைகளில் துரித ஸ்கலிதத்திற்கு இடம் அளிக்காத மாற்று முறைகளைக் கையாள்வது நல்ல பலனைக் கொடுக்கிறது. இதுதவிர சில மருந்து மாத்திரைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

இவை தவிர, சில வெளிப் பூச்சு களிம்புகளும் பலன் அளிக்கும் என நம்பப்படுகிறது. விந்து முந்தும் பிரச்சினை உள்ள ஆண்களின் உறுப்பின் முனையில் உள்ள மொட்டுப் பகுதியானது ஏனையவர்களதை விட தூண்டப்படும் போது கூடியளவு உணர் வினைத்திறனைக் கொண்டிருப்பதே முந்துவதற்குக் காரணம் என்று நம்பப் படுகிறது. இதனால், அப்பகுதியை சற்று மரக்கச் செய்யும் விறைப்பு மருந்துகள் உதவும் என்ற கருத்து நிலவுகிறது. இம் மருந்துகள் உறுப்பின் மொட்டுப் பகுதியின் உணர்நிலையை சற்றுக் குறைப்பதன் மூலம் விந்து விரைவதைத் தாமதப்படுத்துகின்றன. ஆயினும், விந்து வெளியாகும் உணர்வையோ, திறனையோ பாதிப்பதில்லை. பாவனையில் உள்ள இம் மருந்துகளின் ஆற்றல் பற்றிய சிறப்பான ஆய்வுகள் செய்யப்படாத போதும் கிடைக்கும் ஆய்வு முடிவுகளானது இவை ஓரளவு செயற் திறன் கொண்டவை என்பதை உறுதிப்படுத்துகின்றன.

களிம்பு மருந்துகளை விட விசிறப்படும் (Spray) மருந்துகள் உபயோகிப்பதற்கு சுலபமானவை. அத்துடன், விசிறியவுடன் உலர்ந்து விடுவதால் பாவிப்பதும் வெளிப்படையாகத் தெரியாது. இது உறுப்பை மருந்தால் அசிங்கப்படுத்தவோ மனத் திடத்தை குறைக்கவோ செய்யாது என்பது சில நன்மைகளாகும். பக்க விளைவுகள் குறைவு என்பதும் தேவைப்படும் போது மட்டும் உபயோகித்து விட்டு நிறுத்தி விடலாம் என்பவையும் மேலதிக சிறப்புகளாகும். ஏற்கனவே இத்தகைய பல மருந்துகள் பாவனையில் இருந்தபோதும் புது மருந்துகள் பற்றிய ஆய்வுகளும் அவற்றின் செயற்திறன் பற்றிய களப் பரிசோதனைகளும் இப்பொழுது செய்யப்படுகின்றன. இப்பிரச்சினைக்கான சிகிச்சையின் முதற்படி சிகிச்சை முறையாக மாத்திரமன்றி மிகப் பொருத்தமான சிகிச்சை முறையாகவும் இதுவே எதிர்காலத்தில் நிலைக்கும் எனவும் நம்பப்படுகிறது.




# RESIKA TEXTILES

(குறொய்டன் தமிழினி Cash & Carry கடைக்கு உள்ளே உள்ளது)

309 -311 London Road
Croydon CR0 3PA

சுபமுகூர்த்த பட்டுக்கள், டிசைன் சாறிகள், பார்பி சாறீஸ் மற்றும் லேட்டர்ஸ் சேலைகள், பஞ்சாபிகள், சிறுவர் சிறுமியருக்கான ஆடைகள்

திருமணம் மற்றும் பரதநாட்டியத்திற்கு தேவையான நகைசெட், Fancy பொருட்கள்

£50 க்கு மேல் கொள்வனவு செய்வோருக்கு Free Gift

Buy one - get one Free
½ Price Sarees
30% சுடிதார்கள்

Tel: 07931 536 587


## International Seminar on Ethnic Conflict in Sri Lanka

an effort towards peace Organised by Global Peace Support Group – UK

**At**

**University of East London**
**Dockland Campus**
**University Way**
**London E16 2 RD**

**On 22 and 23 March 2008**
**between 9am to 5.30 pm in two sessions**
(refreshments will be provided)

The seminar is designed to provide a platform for an international panel of speakers to air their opinion and provoke discussion with a view to finding a sustainable solution to the ethnic conflict in line with the international norm.
Entrance is free but only with an invitation. As the places available are limited, please book, your place early.
If you want to participate in the seminar as a spectator or show your support in any other way please contact

**02085867856 – K Kunabalasingam**
**02084264851 – K P Nathan**
**02089971057 – S Balasundaram**

Ps: When you call please specify which day and which session you would like to attend.

## அந்த காலத்தில்.... (3ம் பக்க தொடர்ச்சி)

பரம்பரையில் அப்படி நோய் இருந்ததா என்பன போன்ற விபரங்களையெல்லாம் சொல்ல வேண்டும். அதற்குப் பிறகு அவர் 'ஸ்டதாஸ்கோப்பை நெஞ்சிலும், முதுகிலும் வைத்துப் பார்த்துவிட்டு பல கேள்விகள் கேட்பார். அவற்றுக்கெல்லாம் நாங்கள் மறுமொழி சொன்னபின், ஒரு துண்டில் மருந்தை எழுதிக்கொடுப்பார். அந்தத் துண்டைக் கொண்டுபோய் மருந்து வாங்க வேண்டும்.
அந்தக் காலத்தில் தமிழ் வைத்தியரிடம் போனால் அவர் கையைப் பிடித்த நாடி பார்ப்பார். அந்த நாடியே அவருக்கு எல்லா விபரங்களையும் சொல்லிவிடும் அதன் பிறகு, சில குணம் குறிகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டு, தமது மருந்துப் பெட்டியைத் திறந்து சில குளிசைகளை எடுத்துத் தருவார்.

ஒரே குளிசையே சில சமயங்களில் வெவ்வேறு நோய்களுக்கும் தரப்படும். ஆனால் நோய்களுக்கேற்றப்படி 'அனுமானங்கள்' மாறும். ஒரு நோய்க்கு முலைப்பால் அனுமானம் என்றால், வேறொன்றுக்கு அனுமானமாக இருக்கும். பத்தியங்களும் மாறும். 'குடிநீர்' என்றால் குடிக்கும் தண்ணீரல்ல. திற்பிலி, வேர்க் கொம்பு முதலிய பல மருந்துச் சரக்குகளை நீரில் போட்டுக் காய்ச்சி எடுத்த நீருக்கே 'குடிநீர்' என்று பெயர். இந்தக் குடிநீரிலும் பலவகையுண்டு. குடிநீரே பல நோய்களுக்கு மருந்துமாகும்.
பரியாரி இராசா ஒரு சிறு குழந்தையின் கை நாடியைப் பிடித்துப் பார்த்தவிட்டு, குழந்தையின் வயிற்றில் பனை ஓலைத்துண்டு இருப்பதாகக் கூறி மருந்து கொடுத்தாகவும், பிறகு குழந்தைக்கு வயிற்றால் போனபோது ஓலைத்துண்டும் போனதாக யாரோ சொன்னது நினைவிருக்கிறது.

அந்தக் காலத்தில் சிறு குழந்தைகளை பனை ஓலைத்தடுக்கில்தான் வளர்த்திருப்பார்கள். அந்தத் தடுக்கிலிருந்து ஓலைத்துண்டு குழந்தையின் கைகளுள் அகப்பட்டு வாய்கருள் போயிருக்க வேண்டும்.
இப்போதெல்லாம் ஆயுள் வேதக் கல்லூரி களில் படித்துப் பட்டம் பெற்ற 'டாக்டர்கள்' அநேக நோய்களுக்கு ஆங்கில மருந்து களையே கொடுக்கிறார்கள்.

பரம்பரைப் புகழ் வாய்ந்த நமது நாட்டு வைத்தியம் மெல்ல மெல்ல அற்றுப் போய்க் கொண்டிருப்பது போல தெரிகிறது. அரசாங்கம் ஏதோ ஆயுள்வேத வைத்தியத்துக்கென்று ஒரு துறையை அமைத்து, உள்ளூராட்சி அலுவலகங்கள் மூலம் ஆதரவு செய்வதுபோல் தோன்றினாலும், அந்த வைத்தியத்துறை சரியான இடத்தில் வைக்கப்படவில்லையென்றே தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராணவாயு-ஏற்றத்தின் எதிர்ப்பிகள்

நாம் உயிர்வாழ பிராணவாயு இன்றியமை யாதது. இது உயிர்வளி என்று பரவலாக அழைக்கப்படும். வாழ்வதற்கு உதவும் இதே பிராணவாயு பல சந்தர்ப்பங்களில் உயிர் பறிக்கும் தாக்கங்களையும் ஏற்படுத்த வல்லது. விரைவில் முதுமைக்கு தள்ளும் கைங்கரியம் கூட இது செய்கின்றது.

அளப்பரிய எண்ணிக்கையிலான உயிரணுக்களின் தொகுப்பே எம் உடல். அவை ஒவ்வொன்றிற்கும் சுவாசிப்பதற்கு பிராணவாயு இன்றியமையாதது. சாதாரண சூழலில் எம் குருதி எல்லா உயிரணுக் களுக்குமே தேவையான பிராணவாயுவை காவிச் செல்லும். உடலும் செயல்படும்.

இச் செயற்பாட்டின்போது, பிராணவாயுவை உயிரணுக்கள் தம்முடன் கூட்டுப்பொருளாக இணைக்கும்சூழல் எப்போது உருவாகின் றதோ, அப்போது கோளாறும் ஆரம்பிக் கின்றது. சிலவேளைகளில் எலக்ரோன் எண்ணிக்கை முழுமை பெறாத நிலையில் செல்லும்ஒரு மூலக்கூறு, நல்நிலையில் உள்ள உயிரணுக்களின் எலக்ரோன்கள் சிலவற்றைப் பறிப்பதாலும் கோளாறு ஏற்படுகிறது.

இவை தற்செயலாக நடக்கும் ஒரு சம்பவம் அன்று. நாளாந்தம் பிராணவாயு உதவியுடன் சக்தி பெற நடக்கும் நிகழ்வின் பக்க விளைவின் பெறுபேறுதான் இந்தக் கோளாறு. ஆனாலும் எம் உடலின் உள்ளேயே உயிரணுச் சிதைவுக்கு எதிர்ப்பிகள் இருக்கத்தான் செய்கின்றன. இவற்றின் அளவு குறையும் தன்மைக்கு ஏற்ப உயிரணுச் சிதைவு விகிதமும் கூடிக்குறையும். இதில் எது நடந்தாலும் மாற்றம் பெறும் உயிரணு சிதைந்து தன் சுயத் தன்மையை இழக்கிறது. விளைவு, புற்று நோயிலிருந்து பல்வகை நோய்களுக்கும் முதிர்ச்சியை ஊக்குவிக்கும் தன்மைக்கும் வழிவகுககப் படுகிறது.

இந்த பிராணவாயு-ஏற்றம் என்ற பதம் கடந்த நூற்றாண்டுவரை உலோகங்கள் துருப் பிடித்தலைக் குறிப்பதாகவே இருந்தது. உயிர்ச் சத்துக்கள் ஏ சீ ஈ ஆகியவை எம் உடலுள் பிராணவாயுயேற்ற எதிர்ப்பிகளாகச் செயல்படுவது கண்டறிந்தமைதான் உயிர் வேதியலில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அதற்கு முன் கீரைவகைகள் இலைவகைகள் நாட்டு வைத்தியர்களால் புகழப்பட்ட போதும் மேற்கு உலகில் ஏதோ மலச் சிக்கலைத் தவிர்க்கும் பொருட்கள் என்ற அங்கீகாரம் மட்டுமே பெற்றிருந்தன. நாளாந்தம் ஒரு அப்பிள் சாப்பிட்டால் மருத்தவரை கிட்ட வராது செய்யலாம் என்று கூறியவர்கள் கூட அதன் பிராணவாயு ஏற்றத்தின் எதிர்ப்பு திறன் பற்றி அறிந்திருக்கவில்லை. இன்று பழங்களும் மரக்கறி வகைகளும் சிறந்த பிராணவாயு-ஏற்ற எதிர்ப்பிகள் (Antioxidents) என்று போற்றுகிறார்கள்.

பழங்களும் மரக்கறி வகைகளும் சிறந்த உயிர்வளியேற்ற எதிர்ப்பிகள், அவற்றுள்ளும் சிவப்பு நிறத்தவை மேலும் சிறந்தவை.

உயிர்வாயு உதவியுடன் சக்தி பெற நடக்கும் நிகழ்வின் பக்க விளைவால் உருவாகும் பொருள்கள் ஏற்படுத்தும் உயிரணுச் சிதைவு தவிர்க்க முடியாதது. அதன் விளைவால் நாம் புற்று நோய் முதல் பல்வேறு தாக்கங்களுக்கு ஆளாகாமல் எம்மை பாதுகாக்க வேண்டு மென்றால் பிராணவாயு-ஏற்ற எதிர்ப்பிகள் தயவைத்தான் நாடவேண்டும். இவற்றுள் எத்தனையோ வகை அடங்கும். தலை சிறந்த உயிர்வளியேற்ற எதிர்ப்பியான உள்ளியில் மட்டும் அந்த ரகத்தைச் சேர்ந்த 15 வகையான பொருள்கள் அடங்குகின்றன. தேயிலைகூட, அதில் உள்ள பிளேனோவிட் என்னும் பிராணவாயு-ஏற்ற எதிர்ப்பிக்காக எம் பட்டியலில் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. அவரை இன விதைகளும் முக்கிய இடத்தைப் பிடிக்கின்றன. எம் மனதைவிட்டு அகலாத விடயங்களில் ஒன்றாக நாம் நாள்தோறும் உணவுடன் போதிய அளவு பிராணவாயு-ஏற்ற எதிர்ப்பிகள் எடுப்பதும் இருக்க வேண்டும்.

**- சி.மாசிலாமணி**

# பழங்குடியினரிடம் மன்னிப்புக் கேட்டார் ஆஸ்திரேலிய பிரதமர்

ஆஸ்திரேலியாவில் பழங்குடியினருக்கு வெள்ளையர்கள் இழைத்த கொடுமைக்காக மன்னிப்புக் கேட்டு அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் பேசிய பிறகு, அங்கிருந்த பழங்குடி பெண்ணுக்கு ஆட்டோகிராப் வழங்குகிறார் ஆஸ்திரேலிய பிரதமர் கெவின் ரூட்.




ஆஸ்திரேலியாவில் உள்ள பழங்குடியின மக்களுக்கு வெள்ளையர்கள் செய்த கொடுமைகளுக்காக தற்போதைய பிரதமர் கெவின் ரூட் மன்னிப்புக் கேட்டார்.

ஆஸ்திரேலிய கண்டத்துக்கு வெள்ளையர்கள் வந்து குடியேறியபோது, சுமார் 10 லட்சம் பழங்குடியினர் அங்கு இருந்தனர்.

அந்த கண்டம் அவர்களுக்குச் சொந்தமானது. இப்போது 4.7 லட்சம் பழங்குடியினர் மட்டுமே அங்கு உள்ளனர்.

1910 முதல் 1970 வரை பழங்குடியினரின் குழந்தைகள் சுமார் 1 லட்சம் பேர், பெற்றோரிடம் இருந்து பிரித்து வேறு இடங்களுக்கு அரசே அழைத்துச் சென்றது. பழங்குடியினர் இனம் அழிந்து வருவதாகக் கூறி அவர்களது பிள்ளைகளை பிரிக்க சட்டம் இயற்றி அச்சட்டம் செயல்படுத்தப்பட்டது. பெற்றோரிடம் பிரிக்கப்பட்டவர்கள், திருடப்பட்ட வர்க்கம் என அழைக்கப் படுகின்றனர். அவர்களும் அவர்களது பெற்றோரும் அடைந்த வேதனையின் வடு இன்னும் அவர்கள் மனதில் மறையாமல் உள்ளது.

அவர்கள் மிகவும் வறிய நிலையில் ஆஸ்திரேலியாவில் பல பகுதிகளில் வாழ்கின்றனர். பழங்குடியினருக்கு இழைத்த கொடுமைகளுக்கு மன்னிப்பு கேட்க வேண்டும். அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக அவர்கள் கோரி வந்தனர். ஆனால் இதற்கு முன்பு ஆட்சியில் இருந்த கோவர்ட் தலைமையிலான பழமைவாத கட்சி இக்கோரிக்கையை ஏற்கவில்லை.

தற்போது ஆட்சிக்கு வந்துள்ள பிரதமர் கெவின் ரூட், புதன்கிழமை நடந்த நாடாளுமன்றக் கூட்டத்தில் ஆஸ்திரேலிய பழங்குடியின மக்களுக்கு வெள்ளையர் அரசு இழைத்த கொடுமைக்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தில் அவர் பேசியது டிவியில் நேரடியாக நாடு முழுவதும் ஒளிபரப்பப் பட்டது.

பழங்குடியினரும் ஆஸ்திரேலியர்கள்தான். இதற்கு முன்பு இருந்த அரசுகள் இயற்றிய சட்டங்களாலும், பின்பற்றிய கொள்கை களாலும் அவர்கள் பெருமளவில் வேதனை அனுபவித்துள்ளனர்.

ஆஸ்திரேலியாவின் இதயத்தில் ஏற்பட்ட பெரிய கறையை நீக்க, மன்னிப்பு கோருகிறேன் என்றார் பிரதமர். நாடாளு மன்றத்தில் தொடர்ந்து போராடிய பழங்குடியின உறுப்பினர்களை அவர் பாராட்டினார்.

நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர் களும் எழுந்து நின்று பிரதமருக்கு பாராட்டு தெரிவித்தனர்.

வறுமையில் வாழும் பழங்குடியினர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பாடுபடுவேன் என்றார் பிரதமர் கெவின் ரூட்


# தினேஷ்

## ஜூவலர்ஸ் & ரெக்ஸ்ரைல்ஸ்

நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதம்

22ct தங்க வைர நகைகளை கண்கவர் வேலைப்பாடுகளுடன் உங்கள் எண்ணம் போல் செய்து கொள்வதோடு பழைய தங்கத்தில் புத்தம் புதிய நகைகளையும் செய்து கொள்ளலாம். சமய முறைப்படி பொன்னுருக்கல் செய்வதற்கான சகல வசதிகளும் செய்து தருவதோடு திருமணத்திற்கு தேவையான வைரத் தாலிக்கொடிகளும் அனுபவமுள்ள நகைச் சிற்பிகளால் செய்து கொடுக்கப்படும்.

தினேஷ் ரெக்ஸ்ரைலஸ் ஸ்தாபனத்தாரின் புதிய வரவான
மங்கையருக்கான
நிவேதா டிசைன் மேலாடைகள்
£9.99 முதல் £49.99 வரை சிறப்பு அறிமுக விலையில்

சில்க்குயின் சேலைகள் £15 இல் இருந்து பஞ்சாபிகள் £10 இல் இருந்து



**THINESH JEWELLERS & TEXTILES**
276, Lewisham High Street
Lewisham
London SE13 6JZ

**Tel: 020 8613 9569**

லூாசியம் shopping சென்ரறில் இருந்து ஆஸ்பத்திரி பக்கமாக 4-5 நிமிட நடைதூரத்தில் உள்ளது
(பழைய தங்கமாளிகை இருந்த அதே இடத்தில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்கற்கும் மாணவர் பக்கம் வாசகர் போட்டி

**பிள்ளைகளின் தமிழ் மொழி, தமிழ்த் தாயகஉணர்வு, பண்பாடு ஆகியவற்றை வளர்க்கக் கூடிய போட்டிகள், கட்டுரைகள், கவிதைகள் என்பனவற்றை இப்பத்திரிகை வரவேற்கின்றது.**

## சொற்களைத் தேடுதல்

கீழுள்ள எழுத்து வலையில் 64 சொற்கள் பின்னப்பட்டுள்ளன. இவை மேலிருந்து கீழ், கீழிருந்துமேல் , இடமிருந்து வலம், வலமிருந்து இடம் மூலைப்பக்கம் என நேர்கோட்டில் அமையும் நீங்கள் இவற்றைக் கண்டுபிடித்து வளையமிட்டுக் காட்டவும் .

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நெ | ப் | ரி | வூ | ன் | நீ | கா | க | ம் | மே | ம் | க | ய | லை | ந |
| து | ல் | லி | வ | ம் | ரா | லி | ய | க | க | மு | லி | ப | க | ன் |
| ம் | ஈ | ன் | மீ | ண் | வி | து | நெ | க் | ம் | கி | தி | ம் | றை | மை |
| லி | ய | ர் | வா | யு | ரு | ரு | மு | தா | அ | ல் | ஏ | மை | ய | ளி |
| யா | மி | நே | ப் | வ | ப் | அ | ர் | ம் | ய | ப | ற் | று | ம் | ன் |
| ழ | கு | ழ | ம் | பு | ப | ரு | வ | கா | ல | ம் | ரு | சி | ல | வெ |
| ன் | தி | ய | மை | ர் | ம் | ன் | லை | பூ | ர் | சா | பே | ரி | ட | ர் |
| மு | டி | று | ன் | சா | அ | ளி | த | ம | மி | ம் | ல | க | ண் | லி |
| டி | சி | வி | பு | ய் | வா | ல் | செ | கூ | ரி | ய | ன் | ளி | ம | ப |
| வு | ன் | ஆ | த | ரு | இ | ஈ | பி | ம | வ | எ | றை | மு | ட | ந |
| க | ரு | வி | ன் | டு | ட் | சை | ன | ர் | ரி | மு | ம | லை | டு | ஏ |
| ன | இ | யா | கோ | ச | ளி | டோ | வு | க் | சை | த் | ப | ளி | ம | லை |
| ர் | ச | க் | தி | ம | த் | தி | ய | கோ | டு | து | ன் | ப | ம் | நீ |
| பூ | ட | க | றி | வு | மே | ம் | பா | டு | று | க | ர் | ச் | சி | ல |
| க | சி | ல் | கை | ம் | பெ | ண் | க | டி | மு | மை | யா | றி | செ | கா |

| | | | |
|---|---|---|---|
| பருவகாலம் | விருப்பம் | நெருப்பு | சாரப்பு |
| சாம்பல் | அருள் | துருவம் | ஆயுதம் |
| ஈரப்பு | தலைவர் | சான்று | எரிமலை |
| சூரியன் | அழுக்கம் | முகில் | செவ்வாய் |
| வானிலை | மேகம் | நீராவி | பற்று |
| பனிமலை | தாக்கம் | சக்தி | ஆவியாக்கல் |
| விண்மீன் | புதன் | புளூட்டோ | பூமி |
| சிறுமை | வாயு | மத்தியகோடு | நெப்ரியூன் |
| இளைப்பு | பிழை | பேரிடர் | சனி |
| வரிசை | மிகுதி | எழுத்து | துல்லியம் |
| குழம்பு | நேயம் | இருள் | வையகம் |
| யூரனசு | வியாழன் | ஏடு | படலை |
| துகர்ச்சி | செறியாமை | வைகறை | நன்மை |
| மேம்பாடு | நடைமுறை | கைம்பெண் | துன்பம் |
| எதிலி | வெள்ளி | பயம் | காகம் |
| முடிவு | மண்டலம் | விண்கலம் | காலநிலை |

**பெயர்:** Write in Tamil ..................................................................................

**முகவரி:** Write in English .......................................................................

........................................... **தபாற் குறியீடு:**.......................................

**தொலைபேசி:**.........................................................................................

இம்மாத சொற்களைத் தேடுதல் போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும். போட்டியாளர்களில் இருவர் குலுக்கல்முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்.


அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King, Lewisham** ஸ்தாபனத்தார் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்.

இப் போட்டிக்கான விடைகள் இம் மாதம் **20ம் திகதிக்கு** முன் கிடைக்கும் படியாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

**Vadalee, PO box- 24783, London, SE13 7YE**

*சிறுவர்கள் தங்களின் தமிழ் அறிவை வளர்த்துக்கொள்ள இது உதவியாக இருக்கும் எனும் நோக்கில் ஆக்கப்பட்டுள்ளது. எனவே பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை இப் போட்டிகளைச் செய்யுமாறு ஊக்கப்படுத்துங்கள், உதவவேண்டாம்.*

## குறுக்கெழுத்துப் போட்டி – 80



இம்மாத போட்டியின் விடைகள் எமது அடுத்தமாத வடலியில் பிரசுரிக்கப்படும் போட்டி யாளர்களில் இருவர் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களின் பெயர் விபரங்கள் அடுத்த வடலியில் வெளிவரும்

அத்துடன் இவ்விருவருக்கும் **Everest Curry King Lewisham** ஸ்தாபனத்தினர் தலா 10 பவுண் வவுச்சர்களை வழங்க உள்ளனர்

**பெயர்:** Write in Tamil ..................................................................................

**முகவரி:** Write in English .......................................................................

........................................... **தபாற் குறியீடு:**.......................................

**தொலைபேசி:**.........................................................................................

*கீழ்கண்ட குறிப்புக்களைக் கொண்டு காலியாகவுள்ள இடங்களை சரியான சொற்களால் நிரப்பி அனுப்புங்கள். ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது. சரியாக நிரப்பி அனுப்பும் வாசகர்களில் குலுக்கல் முறையில் தேர்வுசெய்து இருவர் தலா 10 பவுண் வவுச்சர்கள் பரிசாக அளிக்கப்படும்.*

**இடமிருந்து வலம்**

1. தமிழர்களின் புத்தாண்டு தினம்
3. விடுதலைக்காய் இன்னுயிரை அர்ப்பணித்த மூத்த தமிழ் தளபதிகளுள் ஒருவர்
5. கட்டடம் கட்ட கடற்கரை ஓரங்களில் இருந்து பெறப்படுவது
9. தோளின் மறுபெயர். உடம்பின் மேற்கை.
12. பூமியின் வடக்கு, தெற்கு முனை.
13. துப்பும் செயல்

**வலமிருந்து இடம்**

6. தாயகத்தில் போர்நிலை காரணமாக அங்கங்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்பு செய்து வழங்கி வரும் ஓர் அமைப்பு.
8. இது பொதுவாக எழுதப்பட்ட ஓலை, உறுதி, சீட்டு, என்பவற்றை குறிக்கும். (குழம்பியுள்ளது)
11. 'பொறாமை' இதன் மறு பெயர்
14. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களால் பூமிக்கு ஏற்பட்ட பெயர்களில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. 'பொற்காசு முடிப்புபை இவ்வாறு அழைக்கலாம்.
2. நீளமான மரக்கட்டைகளை பெருங்கயிறுகளால் இணைத்துக் கட்டி கடலில் செல்ல பாவிக்கப்படும் ஒரு கலம்.
4. கேள்வி ஒன்றிருந்தால் இதுவும் அங்கு இருக்கும்.
6. நெருப்பிலிருந்தும் ஒளியிலிருந்தும் இதைப் பெறலாம்.
13. 'உடம்பு' எனப் பொருள்படும். (குழம்பியுள்ளது)
15. நெல்லில் இருந்து அரிசி எடுக்கும்போது நீக்கப்படுவது.

**கீழிருந்து மேல்**

7. நிலம் அல்லது தட்டையாக உள்ள ஒரு பொருளின் பரந்திருக்கும் பாகத்தின் அளவு.
10. இது அவயவம் எனப்பொருள் படும்.
11. உயரமான குன்று அல்லது மலையில் இருந்து விழும் நீர்.
14. தினமும் வெளிவரும் பத்திரிகை
16. இதை செய்து உண்டு வாழ்பவர்களே வாழ்வர். மற்றொர் தொழுது பின் செல்வர் என்பர்

(கடந்த போட்டி முடிவுகள் 14ஆம் பக்கத்தில்)

## பிரபல்யமான கல்லூரிகளை நாடும் பெற்றோர்கள் அதனால் கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கை வீழ்ச்சியடைகிறது.

அருகில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்ப்பதை கைவிட்டு புகழ்மிக்க பாடசாலைகளில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதிலேயே பெற் றோர்கள் கண்ணாகியிருக்கின்றார்கள்.

காலையிலும் நண்பகலிலும் பிள்ளைகளை ஏற்றி இறக்கும் பணியில் அநேகமான பெற்றோர் தமது நேரத்தைச் செலவிடு கின்றார்கள். இதனை அவர்கள் ஒரு பெருமையாகவும் சொல்லிக் கொள்கின்றார்கள். இத்தகைய செயற்பாடுகள் காரணமாகச் நகர மட்டப் பாடசாலைகளை நோக்கி நகரும் நிலை இன்று குடாநாட்டில் பரவலாகக் காணப் படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றம் இந்நூற்றாண்டு முடிவிற்குள் திடீர் பேரழிவுகளை தோற்றுவிக்கும்: காலநிலை மாற்ற நிபுணர்கள் எச்சரிக்கை

காலநிலை மாற்றமானது இந் நூற்றாண்டு முடிவதற்குள் திடீர் ஆபத்துக்களையும் பேரழிவுகளையும் பூமியில் தோற்று விக்குமென காலநிலை மாற்ற நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த மாதம் வெளியிடப்பட்ட ஆய்வொன்றில் காலநிலை மாற்றத்தால் பாரிய அழிவுகளை எதிர்கொள்ளக்கூடிய 9 பிராந்தியங் களை விஞ்ஞானிகள் இனங் கண்டுள்ளனர்.

ஆக்டிக் கடல் மற்றும் கிறீன்லாண்ட் தீவிலுள்ள பனிப்பாறைகள் பெருமளவில் உருகு வதற்கான சாத்தியங்கள் இருப்பதனால் கடல் மட்டம் உயர்வடைவதற்கான அபாயங்கள் இருப்பதாக விஞ்ஞானி கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அடுத்து அமேசன் காடுகள் பெருமளவு தாக்கத்தினை எதிர் கொள்ளக்கூடிய பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ளதுடன் இங்கு மழைவீழ்ச்சி குறைவதற்கான சாத்தியங்கள் அதிகரித்திருப்பதால் அங்குள்ள மரங்கள் புதிய மரக் கன்றுகளை உருவாக்காமலே அழிந்து போகும் நிலை உருவாகியுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அடுத்து இவ் எல்-நினோ காலநிலையானது ஆபிரிக்கா விலிருந்து வட-மெரிக்கா வரையும் தீவிரமான தாக்கங்களை உருவாக்கு மென தெரிவித்துள்ள விஞ்ஞானிகள் இம்மாற்றங் களை கண்காணித்து முன்னதாகவே எச்சரிக்கை விடுக்கும் முறைமையொன்றுக்கும் அழைப்பு விடுத்துள்ளனர்.

காலநிலை மாற்ற நிபுணர்களை உள்ளடக்கிய உலகின் பிரசித்தி



பெற்ற பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்த சர்வதேசக் குழுவொன்றே இவ்வாய்வை மேற் கொண்டுள்ளது. இது தொடர்பாக ஜேர்மனியின் தலைநகர் பேர்லினில் நடைபெற்ற கருத்தரங்கில் சுமார் 52 சூழலியல் நிபுணர்களுடனும் 36 முன்னணி காலநிலை மாற்ற ஆராய்ச்சியாளர் களுடனும் விஞ்ஞானிகள் கலந்துரை யாடலை நடத்தி யுள்ளனர். இதில் கலந்து கொண்ட ஒவ்வொரு வரிடமும் அடுத்த நூற்றாண்டில் காலநிலை மாற்றத்தால் அதிகளவு ஆபத்துக்களை எதிர்கொள்ளும் பிரதேசங்கள் தொடர்பில் கேள்விகள் கேட்கப்பட்டன.

வித்தியாசமான மாற்றங்களை நாம் முன்கூட்டியே அறிந்திருந்தால் வெப்ப அதிகரிப்பைக் கட்டுப்படுத்தக் கூடிய இலக்குகளை எம்மால் வரையறுக்க முடியுமென விஞ்ஞானி யொருவர் தெரிவித்துள்ளார்.

இந்நூற்றாண்டு முடிவுக்குள் சராசரி வெப்பநிலை 6.4 செல்சியஸால் அதிகரிக்கக் கூடுமென கடந்த வருடம் ஐ.நா.வின் நிபுணர் குழு எச்சரித்திருந்தது. இதனால் உலகின் பெரும்பாலான பகுதிகளில் உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதுடன் மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர் வதற்கும் நூற்றுக்கணக்கான உயிரினங்கள் அழிந்து போவதற்கும் இது வழி வகுக்கு மெனவும் தெரிவித் திருந்தனர்.

இப்புதிய ஆய்வின் படி ஆக்டிக் கடல் பிராந்தியத்தின் வெப்பநிலை 0.5 செல்ஸியத் திலிருந்து 21 பாகை செல்ஸியஸ் வரை அதிகரிக்கும் சாத்தியங்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் கணிப்பிட்டுள்ளனர். அத்துடன் கிறீன்லாண்டின் பனிப் பாறைகள் உருக ஆரம்பிப்பதற்கான சாத்தியங்கள் 50 வீதமாக அதிகரித் துள்ளது. ஆனால், இவை முழுவதும் உருகுவதற்கு நூற்றுக் கணக்கான ஆண்டுகள் எடுக்கு மெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பனிப்பாறைகள் உருகுவதனால் கடல் மட்டம் 7 மீற்றருக்கு உயர்வடையும் வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

3.5 செல்ஸியஸ் வரையிலான வெப்ப அதிகரிப்பைக் காட்டும் எல்-நினோ காலநிலை ஆபிரிக்காவிலிருந்து வட அமெரிக்கா வரை கடும் தாக்கத்தை ஏற்படுத்துமென குறிப்பிடப்படு வதுடன் இது அமேசன் காடுகளில் 30 வீதமான மழை வீழ்ச்சியைக் குறைக்கும். அத்துடன் உலகம் பூராவும் பருவநிலை மாற்றங்களை அதிகளவில் ஏற்படுத்துவதுடன் வழமைக்கு மாறான வரட்சி மற்றும் வெள்ளப்பெருக்கையும் ஏற்படுத்து மென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தாய்மொழி என்பது வெறும் எழுத்துகளின் அணிவகுப்பல்ல அது ஓர் இனத்தின் அழியாத அடையாளம்: வைரமுத்து

தமிழ் கட்டாயப் பாடம் என்ற தமிழக அரசின் உத்தரவு செல்லும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம், தமிழுக்கு விடியல் கிடைத்திருப்பதாக கவியரசு வைரமுத்து பெருமை பொங்க கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழக அரசு, தமிழுக்கு விடியல் பெற்றுத் தந்திருக்கிறது. நூற்றாண்டுகளின் இருட்டை உச்ச நீதிமன்ற தீர்ப்பு உடைத்திருக்கிறது. ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடம் என்ற தமிழக அரசின் ஆணை செல்லுபடியாகும் என்ற உச்சநீதிமன்ற தீர்ப்பின் மூலம் தமிழ் தலை நிமிர்கிறது.

தமிழ் படிக்க மறுக்கிற அல்லது தயங்குகிற ஒரு தலைமுறையால், அடுத்த நூற்றாண்டில் தமிழின் தொடர்ச்சி அற்றுப் போகுமோ என்ற மானமுள்ள கவலைக்கு மருந்து கிடைத்திருக்கிறது.

தாய்மொழி என்பது வெறும் எழுத்துகளின் அணிவகுப்பல்ல



ஒலிகளின் ஊர்வலமல்ல. தாய் மொழிதான் ஓர் இனத்தின் அழியாத அடையாளம் அது கலாசார கருவூலம்.

உலகமயமாதல் என்ற சுனாமியில் அத்தனை அடையாளங்களும் அழிந்துகொண்டிருக்கிற காலக ட்டத்தில் இன அடையாளமாக எஞ்சி நிற்பது மொழி மட்டும்தான். அந்த அடையாளம் அழிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தில் இருந்தபோது உச்சமன்ற தீர்ப்பு எங்களுக்கு ஊக்கம் தருகிறது. தமிழ் படிப்பதை சட்டக் கடமையாக கருதாமல், தார்மீக கடமையாக தமிழர்கள் கருத வேண்டும்.

திறக்கப்பட்ட ஒரு பாலம்தான் இந்த தீர்ப்பு. பாலமே பயணம் போகாது பயணிகள் நாம்தான் பயணம் செய்ய வேண்டும். தமிழுக்கு செம்மொழிப் பெருமை தந்த தமிழக முதல்வர் கருணாநிதி அவர்கள், தமிழ் கட்டாயப் பாடம் என்ற கட்டளையும் பெற்றுத் தந்திருக்கிறார். தமிழ் கூறும் நல்லுலகம், அவருக்குத் தலை வணங்கி நன்றி சொல்கிறது.

இனிவரும் நூற்றாண்டுகளில் உலகத்து மொழிகள் எல்லாம் உதிர்ந்து போகக் கூடும். 6 மொழிகள் மட்டுமே காலக்கரையில் தப்பி ஒதுங்கும் என்று, விஞ்ஞான மானுடவியல் எச்சரிக்கிறது. சீனம், ஆங்கிலம், இந்தி, அரபி, தமிழ், ஸ்பானிஸ் என்ற அந்த 6 மொழிகளுள் தமிழும் இடம் பெறவிருக்கிறது என்பது எதிர்காலக் கணிப்பு. தமிழ் அப்படி நிச்சயம் நிலைபெறும் என்பதற்கான முதல் நம்பிக்கையின் முதல் தளிராக இந்த உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்கிறேன்.

உணர்வுள்ள தமிழர்கள், இந்த தீர்ப்பை வீட்டுக்கு வீடு கொண்டாட வேண்டும். தங்கள் பிள்ளைகளுக்குத் தமிழ் ஊட்டி வளர்க்க வேண்டும் என்று கூறியுள்ளார் வைரமுத்து

இணையத்தில் வடலி
www.vadalee.com

## வேதம் புதிது.!

கூலிக்கு மாரடிக்கும்
கூனல் கிழவி சிலர்
வேலிக்குப் பொட்டு வைத்து
வெளியேறி நாட்சிலவில்
போலிக்கு வாழ்வளிக்கும்
புலம்பெயர் மண் கால் பதித்தே -
இன்று
தாலிக்குக் கொடிபோதா
தடிப்பாகத் தேடுகின்றார்.

கைநாட்டுப் போட்ட கதை
கடக்கு முன்பே மறந்து விட்டு
ரை கோட்டு சகிதமுடன்
இராக்காலப் பனியில் நின்று
பை போட்டு கதைத்த அப்போ
பார்த்திருந்த வட்டு ஒன்று -ஆச்சி
டைபோட மறந்ததினை
ஞாபகத்தில் கொண்டு வந்தான்.

ஆங்கிலமும் தெரியுமென்று
அருகிருப்போர் அறிந்துகொள்ள
பாங்கிலவள் பேச எண்ணி
பத்து தரம் நோ நோ சொல்ல
மூங்கிலவன் கையெடுத்த -நல்ல
முரட்டுப் பொடியனுமோ
வாங்கினிலில் உட்கார்த்தி
வடிவாகச் சாத்திவிட்டான்.

வட்டிலிலே பழஞ்சோறு
குடித்த கதை கேட்கவுமே
வட்டிஸ்தற்? பழஞ்சோறு
பாட்டியவள் கேட்டுவிட்டு
கொட்டிக்க தன் பசிக்கு
கம்பூர்கர் வேணுமென -சந்தை
பெட்டிக்கை பாரன் என்று
பேரனுமோ சொல்லிவிட்டான்.

அப்புவுடன் சேர்ந்திருந்தால்
அரசுப் பணம் குறையுமெண்ணி
தப்புகளைத் தவிர்ப்பதற்காய்
தாத்தாவைத் தனியிருத்தி
கொப்பு ஒன்று வேண்டுமென்று
கோதையவள் தன்னருகே
சப்பு ஒன்றை வைத்தபடி
சந்தி பல சுற்றுகிறாள்.

சித்தெறும்பு கடித்த பாட்டை
சிறுகப் படித்தபடி
பெத்த பிள்ளையோடிருந்தால்
பேத்தி என்று சொல்வரெண்ணி
மெத்த சுகம் காண
மேல் மாடி வீடெடுத்து
செத்த பிணம் பலவும்
நித்தம் சுடலையிலே.

ஊரறியேன் பேரறியேன்
உண்மையிது நானறியேன்
வாழ்வறியேன் தொழிலறியேன்
வந்த இடம் வாழ்வறியேன்
சூதறியேன் வாதறியேன் -அவர்
சொல்லியதால் ஈதறிவேன்
நீதறிவீர் நினைத்திடுவீர்
நிலையற்ற வாழ்வுணர்வீர்.

த.சு.மணியம்

RADIUS SERVICE LTD

For Sales, Service and Repairs of Commercial Refrigeration & Air-Conditioning

உங்களின் அனைத்து குளிர்சாதன உபகரணங்களின் தேவை, மற்றும் பழுதுபார்த்தல் போன்றவற்றிற்கு நம்பிக்கையுடன் நாடவேண்டிய ஒரே இடம்



- Shelving
- Chillers, Freezers
- Air Conditioning systems
- Shop Fitting
- Cold rooms etc.

* Remote Dairy Low Fronted
* Plug in Dairy
* Double Door Chillers
* Jumbo Freezers







Unit: 23-24 Resolution Way
London, SE8 4NT
Tel: 020 8692 0257 / 020 8694 2786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்காப் படை நடவடிக்கைகளால் 7,102 மன்னார் மாணவர்களின் கல்வி கடும் பாதிப்பு

சிறிலங்கா அரசாங்கத்தினது படை நடவடிக்கைகளால் மன்னார் பிரதேசத்தில் 7,102 மாணவர்களின் கல்வி நிலை மிகக் கடுமையாக பாதிப்படைந்துள்ளது.

மன்னார், மடு கல்வி வலயத்தில் 3 பாடசாலைகள் மீள இயங்காமலும் 13 பாடசாலைகள் இடப்பெயர்வுகளால் மூடப்பட்டும் 9 பாடசாலைகள் இணைப்பு பாடசாலை களாகவும் இயங்கி வருகின்றன.
மன்னார் கல்வி வலயத்தில் உள்ள 36 பாடசாலைகளில் 7,102 மாணவர்கள் கல்வி கற்று வந்தனர்.
சிறிலங்காப் படையினரின் படை நடவடிக்கைகள் காரணமாக 13 பாடசாலைகள் சொந்த இடங்களில் இயங்க முடியாமல் மூடப்பட்டுள்ளன.

கடந்த கால படை நடவடிக்கைகள் காரணமாக உயர் பாதுகாப்பு வலயங்களாக காணப்பட்ட கட்டையடம்பன் அ.த.க., பெரியகுளம் றோ.க, பெரியமுறிப்பு றோமன் கத்தோலிக்க ஆகிய மூன்று பாடசாலைகளும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மூடப்பட்டுள்ளன.
மன்னார் பெரிய பண்டிவிரிச்சான் மகா வித்தியாலயம், தட்சணாமருதமடு அ.த.க., பாலம்பிட்டி அ.த.க., இரணை இலுப்பைக்குளம் அ.த.க., சின்னப்பண்டி விரிச்சான் அ.த.க. ஆகிய 5 பாடசாலைகள் பெரியமடு மகாவித்தியாலயத்திலும் கீரிசுட்டான் அ.த.க., சின்ன வலையன்கட்டு அ.த.க., முள்ளிக்குளம் அ.த.க. ஆகிய பாடசாலைகள் நட்டாங்கண்டல் அ.த.க. விலும் விளாத்திக்குளம் அ.த.க. பாடசாலை, பனங்காமம் அ.த.க. விலும் 9 பாடசாலைகள் இணைப்புப் பாடசாலைகளாக இயங்கி வருகின்றன.
இதனால் 7,102 மாணவர்களின் கல்விநிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன
25 பாடசாலை தவிர ஏனைய 11 பாடசாலை களே இப்போது இயங்கி வருகின்றன.

மன்னார் மடு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 121 ஆசிரியர்கள் மீளக் கடமையேற்றுக் கொள்ளாமையினால் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.
சிறிலங்காப் படையினர் முகமாலைச் சோதனை சாவடியினை திட்டமிட்டு மூடியமையினால் மன்னார் மடு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் பணிபுரிந்த 71 ஆசிரியர்கள் இதுவரை தமது கடமைகளை பொறுப்பேற்றுக் கொள்ள வில்லை.
இதேபோன்று மன்னார் உயிலங்குளம் சோதனைச்சாவடி மூடப்பட்டமையினால் 50 ஆசிரியர்கள் தமது கடமைகளை மீளப்பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் இந்த கல்வி வலயத்தில் 36 ஆங்கில ஆசிரியர்கள் தேவையான நிலையில் ஒரு ஆசிரியரும் விஞ்ஞான பாடத்திற்கு 21 ஆசிரியர்கள் தேவையான நிலையில் 3 விஞ்ஞான பாட ஆசிரியர்களும் 21 கணித ஆசிரியர்கள் தேவையான நிலையில் ஒரு கணித ஆசிரியர் மட்டுமே உள்ளனர்.
இத்தகைய ஆசிரியர்கள் பற்றாக்குறை உருவாக்கப்பட்டமையாலும் மாணவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# ஊடகத்துறையினரின் குரல்கள் அடக்கப்படுகின்றன: அனைத்துலக மன்னிப்புச் சபை

இலங்கையில் படுகொலைகள், கடத்தல்கள், மனித உரிமை மீறல்கள் என்பன அதிகரித்து வருகையில் ஊடகத்துறையினரின் குரலை அடக்கும் வகையில் அவர்கள் மீதான தாக்குதல்களும், மிரட்டல்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன என்று அனைத்துலக மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் கடந்த மாசி மாதம் 7ம் திகதி அனைத்துலக மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளதாவது:
போர் நிறுத்தம் முறிவடைந்தனைத் தொடர்ந்து கடந்த 2 வருடங்களில் 10 ஊடக வியலாளர்கள் இலங்கையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும் பாலானோர் தமிழர்கள்.
கொல்லப்பட்ட ஊடகவியலாளர்களில் சிலர் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள், கடத்தல்கள், துன்புறுத்தல்கள் போன்றவற்றை வெளிக்கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் ஆவர்.
இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களை மூடிமறைப்பதற்கான போர்வையாகவே ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்களும், மிரட்டல்களும் மேற் கொள்ளப்படுகின்றன. வன்முறைகள் உக்கிரமடையும் போது ஊடகவியலாளர்கள் மிரட்டப்படுவது மிகவும் கவலை தருகின்றது.

பாதுகாப்புக் காரணங்களை காரணம் கூறி எமது அமைப்பினரை சிறிலங்கா அரசாங்கம் சிறிலங்காவிற்கு செல்ல அனுமதிப்பதில்லை. சிறிலங்காவில் அச்ச நிலமை மோசமடைந்து வருகின்றது. போர் தொடர்பாக மட்டும் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதில்லை. பல காரணங்களுக்காக அவர்கள் மிரட்டப்படுகின்றனர்.
சிறிலங்காவின் அமைச்சர் ஒருவர் தனது உரையை ஒளிபரப்பு செய்யவில்லை எனக்கூறி தொலைக்காட்சி நிறுவனத்திற்குள் புகுந்து தாக்குதலை நடத்தியிருந்தார். உக்ரேனில் இருந்து ஆயுதங்களை வாங்கியதில் நடைபெற்ற ஊழலை அம்பலப்படுத்தியதானல் ஊடகவியலாளர் ஒருவரின் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது. தற்போது அவர் தலைமறைவாகவே வாழ்ந்து வருகின்றார் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



SRI SIVASAKTHY
ASTROLOGICAL CENTRE
Pandith Laxsmana Shastry
பண்டிதர். லக்ஸ்மன் சாஸ்திரி


மலையாள பகவதி அருள் கொண்டு பார்க்கப்படும்

உலகத்தில் சூரிய, சந்திரன் நவக்கிரக மகிமையினாலே இன்பம் துன்பங்கள், நன்மை தீமைகள் பற்றிய விபரங்களைக் கூறுவார் ஜேதிட நிபுணர் லக்ஸ்மன் சாஸ்திரிகள். நீங்கள் அனேக ஜோதிடர்களிடம் ஜோதிடம் பார்த்திருக்கலாம் இவரை ஒரு முறை சந்தியுங்கள் கைரேகை, பெயர் இராசி, லட்சுமி கடாட்சம், பொருள், அரசியல், உத்தியோகம், கல்வி, வியாபாரம், திருமணம், குழந்தைப் பாக்கியம், கணவன் மனைவி ஒற்றுமையின்மை, காதல் கலியாணம், வீசா என்பன பார்த்துச் சொல்லப்படும்.

நிலம், வீடு, யோகம், அதிஸ்ட நம்பர்கள், கோட் வழக்குகள், எதிரிகளினால் மந்திரம், சூனியம், பேய், பிசாசு, கண்திருட்டி, போன்றவைகளுக்கு பரிகாரம் செய்வார். உடன் சந்தியுங்கள். தமிழ், இந்தி, ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகள் பேசப்படும், மலையாள மாந்தரீகம் படித்தவர்.

AKILAN ENTERPRISES LTD
274 High Street North
East Ham, London E12 6SA

Tel: 07939 095 099 &
07507 089 785

(OPENING HOURS 9.30AM TO 8.00PM)


## வரதட்சணை

புரட்சியே செய்ய எண்ணி
புதியதோர் வேகம் கொண்டு
வரும் தலைமுறைக்கு வழிகாட்ட
வரனுக்குத் தட்சணை
வாங்க மாட்டேன் என்றேன் ..!

உற்றார் உறவினரும்
சுற்றமும் நட்பும்
பெண்ணின் பெற்றோரும் - மற்றும்
பேரன்பு கொண்டோரும்
கூடிப் பேசினர்
நோயோ?, நொடியோ?
மாப்பிள்ளைக்கு ஏதோ குறையென!

-அப்துல் சேக் அப்துல்லா


உங்கள் அபிமான வடலியை இப்பொழுது இணையத்திலும் பார்வையிடலாம்

www.vadalee.com






SPICE LAND
FOR THE ASIAN TASTE OF SPICE CURRY

குளிரூட்டப்பட்ட ..... மேலதிக இடவசதி கொண்ட ......

100 இடியப்பம் சம்பல் சொதியுடன் £12 பவுண் மட்டுமே

திருமண வைபவங்கள், பிறந்தநாள் கொண்டாட்டங்கள், சமூக ஒன்றுகூடல்கள் போன்ற உங்கள் விருந்துபசார தேவைகள் எதுவானாலும் அதற்கு தகுந்தபடி சுவையான, தரமான உணவுகளை ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

7 days a week
Open 11am to midnight

212 LONDON ROAD,
CROYDON,
SURREY CR0 2TE

உங்கள் அனைத்து தொடர்புகளுக்கும்
020 8667 1700
020 8649 8895, 07984 038 757

£15 பவுண்களுக்கு மேல் உணவை வாங்கினால் 3 மைல் எல்லைக்குள் இலவசமாக வினியோகம் செய்யப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல செரிமானமும் மனச்சார்பும்

நமது உடல் முழுவதுமே செரிமானப்பாதையே சுற்றிக் கட்டப்பட்டுள்ளது. எனலாம். செரிமான உறுப்புகளை ஏழு பிரிவாகக் குறிப்பிட்டுக் கூறலாம். அவை: வாய், தொண்டை, உணவுக்குழல், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல், ஆசனவாய், உணவு செல்லும் பாதையில் மூடித் திறக்கும் தசைகளால் ஆகிய வாசல்கள் ஆங்காங்கே இருக்கின்றன. இவற்றின் முதலில் இருப்பது உதடுகள் கடைசியாக ஆசனவாய். இதன் வழியாக மலம் வெளித்தள்ளப்படுகிறது. இதைச் சுற்றியுள்ள தசைகளுக்குச் சுருக்கும் தன்மை அதிகமாக உண்டு.

மேற்குறிப்பிடப்பட்ட வாசல்களில் மூன்றிலே, நமது விருப்பம்போலவே திறந்து மூடலாம். அவையாவன: உதடுகள், உணவுக்குழலின் தொடக்கம், ஆசனவாய்த் தசைகள், வாயைத் திறக்க மாறுப்பதால் எதையும் விழுங்காமல் தடுத்துவிடலாம். மலம் வெளியே செல்லாதபடிக்கு ஆசனவாய்த் தசைகளைச் சுருக்கிக்கொள்ளலாம். ஆனால் பிறவாசல்கள் தாமாகவே திறந்து மூடுகின்றன. நாம் உணவை விழுங்கிவிட்டோமென்றால், பின்னர் நடப்பவை யாவும் ஒன்றின் பின்னொன்றாகத் தொடர் தேர்ச்சியாக நடைபெறும். உணவை விழுங்கிய பின்னர், உணவு நமது கட்டுப்பாட்டிற்குள் முழுவதுமாக இருப்பதில்லை. எனவே நமது உதடுகளை, அதாவது, வாயை திறந்து உணவு உண்பதையும் கட்டுபாட்டில் வைத்து, அந்தச் செயலை ஆண்டு நடத்தவேண்டும். எதை உணவாக உட்கொள்கிறோமோ, அந்தப் பொருளைப்பொறுத்தே நமது உடலும் உரம் பெற்ற அமையும் அல்லது பலம் குன்றிக் காணப்படும்.

பற்கள் செய்யும் மிக முக்கியமான தொழில்: நாம் உண்ணும் உணவை நமது பற்கள் சிறிய சிறிய துண்டுகளாக நொறுக்கிவிடுகின்றன. அவ்வாறு செய்தால் மட்டுமே செரிப்பதற்கு உதவுகின்ற வேதிமங்கள் உணவின் மீது வினை புரியமுடியும். உணவு எத்துணை நுண்ணிய சிறுதுண்டுகளாகப் பற்களினால் ஆக்கப்படுமோ, அதற்கு ஏற்பவே செரிமானத்தின் நயமும் அதிகப்படும்.


வாயில் முன்வரிசையிலுள்ள வெட்டும் பற்கள் உணவை மிக மிக நெய்தான சிறுதுண்டு களாக ஆக்குகின்றன. பின்னர் இவை உமிழ்நீருடன் கலந்து கூழாக்கப்பெறுகின்றது. இதைச் செய்வது பின்னால் இருக்கும் கடைவாய்ப் பற்கள் அல்லது அரைக்கும் பற்கள் இவற்றின் மேற்பரப்பு தட்டையாக இருக்கும். மேல்தாடையிலுள்ள கடைவாய்ப் பற்களும் கீழ்த்தாடையிலுள்ள கடைவாய்ப் பற்களும் வந்து சேரும் போது, அவை உணவை 200 பவுண்டு எடையினால் அழுத்துவது போன்று அழுத்தி, நெருக்கி உடைக்கின்றன. தாடைகளின் அசைவு பல்வேறு கோணங்களில் நடைபெறுகின்றது. பின்புறமாகவும், முன்புறமாகவும், பக்க வாட்டிலும் இவை அசைந்து கொடுப்பதால், உணவு நன்கு அரைக்கப்படுகின்றது.

புலால் உண்ணும் விலங்குகளின் தாடைகள் இவ்வாறு அசைந்து கொடுப்பன அல்ல. இவை மேலும் கீழுமாக அசைந்து, இறைச்சியைத் துண்டிக்கின்றன. . ஆனால் மனிதனின் தாடைகளும், பற்களும், மனிதனின் உணவாகிய தானியம், கொட்டை வகைகள், பழங்கள், காய்கறிகள் முதலியவற்றை அரைப்பதற்கு ஏற்றவிதமாக அமைந்திருக் கின்றன.

### செரிமானம் வாயில் தொடங்குகிறது!

மாவுப்பொருள் வேதியியல் முறையில் வாயில் செரிக்கப்படுகிறது. வேகவைக்காத மாவுப்பொருள்களின் ஒவ்வொரு சிறிய பகுதியும் ஒரு முரட்டுச்சவ்வினால் மூடப்பட்டுள்ளது. வேக வைக்கும்போது, இதில் பிளவு உண்டாகிறது: எனவே, உள்ளேயிருக்கும் மாவுப் பொருள் வெளியே கசிகிறது.

உமிழ்நீரில் இருக்கும் செரிமானச் சுரப்புக்குத் 'தயலின்' என்று பெயர். இது மாவுப் பொருளின்மேல் வினைபுரிந்து, அதனை 'மால்டோச'ாக மாற்றுகின்றது. பின்னும் சில மாறுதல்கள் அடைந்து, இறுதியாகச் சிறுகுடலில் குளுக்கோளாகச் சென்றடைகிறது. குளுக்கோஸ் முழுமையாக செரிக்கப்பட்ட நிலையில் உள்ள பொருளாகும். மாவுப் பண்டத்திலுள்ள 60 விழுக்காடு அளவு தயலினால் செரிக்கப்படுகின்றது. உணவை விழுங்கிய பின்னும், இந்தத் தயலின்




தொடர்ந்து வேலை செய்கின்றது. அதாவது, இரைப்பையிலுள்ள அமிலம், அதை வினைபுரியாத படி தடுக்கும் வரைக்கும்! உணவிலுள்ள புரதத்தின்மீதும், கொழுப்பு மீதும் தயலின் வினைபுரிவதில்லை. எனினும் இவற்றைக் கொண்ட உணவு நன்றாக மெல்லப்பட்டு, தவிடுபொடியாக்கப்பட்ட பின்னர், வேதிமச் செரிமானம் நன்றாக நடைபெறுவதற்கு அது உதவுகின்றது.

### உதடுகள், நாக்கு, கன்னங்களில் பணி:

வாயிலுள்ள உணவைப் பற்களுக்கு இடையில் புரட்டிக்கொடுக்கும் வேலையில் நமது உதடுகளும், நாக்கும், கன்னங்களும் இடையில் அகப்பட்டுகொள்ளாமல் தப்பித்துக் கொள்ளுவதே ஒரு விந்தைதான்! இந்தச் சிறிய் உறுப்புகள் யாவும் தாமாகவே ஒன்றுக்கொன்று அசைந்துகொடுக்கின்றன. நாக்கு பற்களுக்கு உதவியாக இருக்கிறது. வாயின் மேற்பகுதிக்கு நேராக, நாக்கு உணவைப் புரட்டிக்கொடுப்பதால், உணவு மிக நுண்ணிய துண்டங்களாக தகர்க்கப்படுகிறது. இதற்கு ஏற்றபடி நாக்கின் மேற்பரப்பு சொரசொரப்பாக உள்ளது.

### மூன்று இணை உமிழ்நீர் சுரப்பிகள்

பிளவுபட்ட மூன்று இணை சுரப்பிகள் உமிழ்நீரைச் சுரக்கின்றன. ஒரு இணை நாக்கிற்கு அடியிலும், மற்றொரு இணை கீழ்த்தாடையின் உட்பகுதியிலும், மூன்றாவது இணையிருந்து வெளிவரும் உமிழ்நீர், கன்னங்களின் உட்பகுதியையும் அடைகின்றன. வாயில் இருக்கும் உணவுக்குத் தகுந்த அளவிலேயே உமிழ்நீரின் தொகுப்பு மாறுபடும்.

### சுவை மொட்டுகள்:

உணவில் வாசனைக்கும் அதன் சுவைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நாக்கினால் இனிப்பு, உப்பு, புளிப்பு, கார்ப்பு முதலிய சுவைகளை நாம் அறிகிறோம். 10 ஆயிரம் சுவை மொட்டுகள் நமது நாக்கில் இருக்கின்றன. நுனியில் இருப்பவை இனிப்பை அறிந்து நமக்கு அறிவிக்கின்றன. புளிப்பு மொட்டுகள் நாக்கின் உள்பக்கங்களில் காணப்படுகின்றன. உவர்ப்பை அறியும் சுவை மொட்டுகள் நாக்கின் மேற்பரப்பில் இருக்கின்றன. நாக்கின் பின்பகுதி கசப்புச்சுவையை நமக்கு அறிவிக்கிறது. குரல்வளையின் பின்பக்கச் சுவரில் கூட சில சுவை மொட்டுகள் காணப்படுகின்றன.

சுவை மொட்டுகள் சுவையின் தன்மையை நேராக மூளைக்கே அறிவிக்கின்றன. எனவே, போதுமான அளவு உணவு உட்கொண்டவுடனே, உட்கொள்ளுவதை நிறுத்தும் ஆணையை மூளை பிறப்பிக்கிறது. சிலர் உடற்பருமனை அதிகமாகப் பெருக்கிக் கொண்டே போகிறார்கள். இதற்கு பல காரணங்கள் உண்டு. ஒரு காரணம் அவர்கள் மிகவும் வேகமாக உணவருந்துவதே! எனவே, மூளையானது அவர்கள் எப்பொழுது போதுமான உணவு உண்டுவிட்டார்கள் என்று அறிந்து, ஏற்ற வேளையில், 'மேலும் உண்ணவேண்டாம்' என்ற கட்டளையை அனுப்ப இயலுவதில்லை. எனவே, அளவுமீறிய, அதிகமான உணவு இரைப்பையில் போய்ச் சேர்ந்து விடுகின்றது. அதன் பின்பு தடையின்றிப் பருக்கத்தானே வேண்டும்!. வேறு வழியில்லையே!.

உணவுடனே அதிக நீரைச் சேர்க்காமல், உணவை நாம் நன்றாக மெல்ல வேண்டியது மிக மிக அவசியமானது. உணவுடனே அதிகமான நீர் உட்கொண்டால், உமிழ்நீர் அதிகமாகச் சுரப்பதில்லை. மேலும், உணவுடனே மிகுதியாக நீரைச் சேர்க்கும் பொழுது, உணவு போதிய அளவு நேரம் வாயில் தங்கியிராமல், குடலுக்குள்ளே சென்று விடுகிறது. எனவே, வாயில் செரிமானம் நடக்காமல் போகிறது. சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்னர், 'ஹேரல் பிளட்சர்' என்பவர், 'வாயில் போடும் உணவைப் பல்லுக்கு ஒருமுறை என முப்பத்திரண்டு முறை நன்றாக மெல்ல வேண்டும்' என்று கூறியுள்ளார்! இது சற்று மிகைப்படுத்திக் கூறுவதேயாகும் என்றாலும், ஒரு உண்மையை நன்கு அழுத்தம் கொடுத்து நமக்கு எடுத்துக்கூற விரும்பும் முயற்சியே அது.

அரைக்கும் பற்களில் ஒன்றிரண்டு இல்லாதிருந்தால், நாம் நமது உணவைப் பின்னும் அதிக நேரமெடுத்துமென்று தின்னவேண்டும். முக்கியமான நீரில்லாத உணவுப்பண்டத்தை, அது கூழாகும்வரை நன்றாக மென்று தின்ற பின்னரே! விழுங்க வேண்டும்! நெடுநேரமாக மென்ற தின்றால், உணவின் சுவையை நாம் பின்னும் அதிகமாகச் சுவைத்து உணரமுடியும். இது முற்றிலும் உண்மையே.

உணவை நாம் நன்றாக மெல்ல மெல்ல, அது நாக்கின் பின்புறமாகத் தள்ளப்படுகிறது. பின்பு தொண்டை வழியே கீழே செலுத்தப் படுகிறது. சமயம் பார்த்து, ஒரு சவ்விவால் ஆன மூடியால் அடைக்கப்பட்டு, உணவு செல்வதற்கு ஒரு பாலம் போலவே இயங்குவதால், உணவுக்குழல் திறந்து, உணவை ஏற்றுக்கொள்கிறது. அலைபோன்ற தசைகளின் அசைவால், உணவு இரைப்பைக்கு எடுத்துக் செல்லப்படுகிறது. இதற்கு சுமார் 5 விநாடிகள் ஆகும். வாசல் தானாகவே திறந்து உணவை ஏற்றுக்கொண்ட பின்னர், மீண்டும் மூடிக்கொள்கிறது.

நமது பற்களை நாம் நன்றாக பயன்படுத்த வேண்டும். செரிமானம் நடைபெற உதவ வேண்டிய முதல் முக்கிய பொறுப்பு பற்களுக்கே இருக்கிறது. நீண்ட காலத்திற்கு முன்னர் உலகில் வாழ்ந்து மறைந்துவிட்ட 'டைனோசர்கள்' என்ற பெருவிலங்குகள் மென்று தின்பவையல்ல ஏனெனில் அவற்றிற்கு அரைக்கும் பற்கள் கிடையா! இரைப்பையில் கல் போன்ற பகுதிகள் இருந்ததால், அவை 'டைனோசார்'களின் உணவை அரைத்தன என்று கூறப்படுகிறது. கோழிக்குஞ்சுகளும் தங்கள் உணவை மென்று தின்பதில்லை. அவற்றின் குடல் பைகளில் அரைவைப்பை ஒன்று உள்ளது. அதில் சிறு சிறு கற்கள் உள்ளன. இந்தப் பையில் உணவு கற்களுடன் உரசி அரைக்கப்படுகின்றது!

ஆனால் நாமோ, டைனோசார்களும் அல்ல, கோழிக்குஞ்சுகளும் அல்ல! எனவே, நன்றாக மென்றுதான் உள்கொள்ளவேண்டும். உங்கள் செரிமானம் நன்றாக நடைபெறுவதற்கு உங்கள் பற்களை மிகுதியாக பயன் படுத்துங்கள்!.

கற்பகம்
மக்கள் மனங்கவர்ந்த தமிழ்க் கடை

☆ Fresh இறைச்சி எப்பொழுதும் கிடைக்கும். பெரிய இறைச்சி ஓடர்கள் செய்யும் போது சகாய விலைக் கழிவுடன் சிறு சிறு துண்டு களாகவும் வெட்டித்தரப்படும்.



☆ புதிய, பழைய சினிமாப் படங்கள் மற்றும் தொடர் நாடகங்கள் எப்பொழுதும் கிடைக்கும்



இலங்கையில் இருந்து தருவிக்கப்பட்ட மளிகைப் பொருட்கள் மற்றும் மரக்கறி வகைகள் மலிவு விலையில் பெறலாம்.

மலிவிற்கு மறுபெயர் கற்பகம்!!!
தரத்திற்கு மறுபெயர் கற்பகம்!!!

தொலைபேசி அட்டைகள், Audio Video VCD DVD ஆகியன மலிவு விலையில் பெற்றுக் கொள்ள கற்பகம் பல்பொருள் அங்காடி.

பங்கு இறைச்சி உட்பட மான் கோழி பன்றி என எல்லா வகையான இறைச்சிகளும் தினசரி கிடைக்கும்

36 Loampit Hill,
Lewisham,London SE13 7SW
Tel: 020 8694 8810


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்தமாத போட்டி முடிவுகள்

## சொற்களைத் தேடுதல் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. வாரகி சிவராஜசிங்கம், சவுத்தோல்
2. இசைவாணன் குகதாசன், சட்டன்



**சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு**

சோ.அபிநயா, தோண்ரன்கீத்
சோ.ஆர்த்தி, தோண்ரன்கீத்
சுகன்யா, தோண்ரன்கீத்
சி.கீர்த்தனா, கிறீன்பேர்ட்
பொ.கந்தசாமி, தோண்ரன்கீத்
ம.தேருஜா, தோண்ரன்கீத்
ம.இந்துகா, தோண்ரன்கீத்
ம.பகாந்தன், தோண்ரன்கீத்
இ.அபிசன், தோண்ரன்கீத்
இ.சருசன், தோண்ரன்கீத்
சோ.சஞ்சிகா, தோண்ரன்கீத்
என்.அகீல், குறொலி
டிலக்ஷனா தயாநந்தன், வெஸ்ட் குறொய்டன்
தி.கிருஷாகினி, குறொய்டன்
வாரகி சிவராஜசிங்கம், சவுத்தோல்
லிங்கநாதன், தரண்யா, கரோ
அபிதா சத்தியநாதன், எட்ச்வெயர்
நிதர்சன் விவேகானந்தராஜா, மிச்சம்
கவிநயன் மகேந்திரன், சவுத் கரோ
றங்கீதா ராமமூர்த்தி, அபிவுட்
மோனிஷா விவேகானந்தராஜா, மிச்சம்
சுபன் சாந்தக்குமார், மோடன்
சரிகா சாந்தக்குமார், மோடன்
டிலக்ஷன் சக்தீஸ்வரன், ரூட்டிங்
இசைவாணன் குகதாசன், சட்டன்
சரஸ்வதி குகதாசன், சட்டன்
கந்தையா யோகராஜா, லூசியம்
மகிநோத் நரசிம்மன், இல்பேர்ட்
சாதனா குலோத்துங்கன், இல்பேர்ட்
கோ.கிருசாந்தி, ஐசில்வேர்த்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மென்ரன்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மென்ரன்
ரமணன் தங்கவேல், சவுத்தோல்
ஜெசிந்தா யேசுதாசன், கம்பர்வெல்
அனிஸ் பகீமா, ஸ்ரோக் நியுவிங்ரன்
யசோதரா சுப்பிரமணியம், கிறீன்பேர்ட்
சந்தனா பாலமுரளிகிருஸ்ணா, குறோய்டன்
சுதாகரன் சுலேகா, சவுதம்ரன்
சா.சத்தியவதி, லீ
தீபா நந்தகுமார், கிளேகோள்
யசிக்கா நந்தகுமார், கிளேகோள்
கெவின் பிறேமவோ, மனோர்பார்க்
இ.சுயேந்தினி கொலிங்டேல்
ஜனனி விஜயமனோகர், கஸ்ரம் கவுஸ்
பிரவீணன் மத்தியூ. பிரதாபன் மத்தியூ, குறொய்டன்
கே.யோகன், ஈஸ்ட்காம்
அகல்யா ரங்கராயா, கற்பேர்ட்
க.சத்தியநாதன், செல்ஸ்பேர்ட்
ஜெ.ஜெயதர்ஷன், ஈஸ்ட்காம்
சரண்யா ஏகம்பநாதன், பெரஸ்ட்கில்
ரூபி ராஜன், சிட்னம்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
ம.அக்சயா, கற்பேர்ட்
கிருஷாந்தி தங்கராஜா, வெம்பிளி
மனிக்ஷன் தியாகு, என்பீல்ட்
இரவிக்குமார் நிதுர்சன், வால்த்தம்ஸ்ரோ
வீ.அனந்தன், றொல்வேர்த்
பாமினி நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
நிவேதன் நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
சாந்தினி பிரசாந்தன், கொலியஸ்வுட்

## குறுக்கெழுத்துப் போட்டி முடிவு

**போட்டியில் பரிசுபெறும் இருவர்**

1. கிருக்ஷாந்தி, சாள்ரன்
2. மனிக்க்ஷன் தியாகு, என்பீல்ட்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| பே | ரி | ச் | சை | ■ | பி | த் | தா | ன் |
| ரு | ■ | ■ | ச் | ■ | ர | ■ | ம் | ■ |
| ந் | ■ | அ | மி | ல | ம் | ■ | பூ | ■ |
| து | ம | ■ | ழு | ■ | பு | ம் | ல | அ |
| ■ | த் | மு | எ | து | ■ | க | ம் | ல |
| கா | து | ■ | ■ | ரு | ■ | ட | ■ | ட் |
| வா | ■ | ம் | ■ | ம் | ன | க | க் | சி |
| டு | ணர் | தா | த் | பு | ■ | ■ | ■ | ய |
| ணர் | ■ | ஆ | ■ | ■ | மு | த் | த | ம் |

**சரியாக விடை எழுதியனுப்பியவர்களில் இடமுள்ளவரை இடம் பெறுபவர்கள் வருமாறு**

ரஞ்சனா குமாரசாமி, தோண்ரன்கீத்
சோ.அபிநயா, தோண்ரன்கீத்
வர்ணன் லோகேஸ்வரன், எட்மென்ரன்
சுபன் சாந்தக்குமார், மோடன்
சாந்தினி பிரசாந்தன், கொலியஸ்வுட்
பிரவீணன் மத்தியூ, குறொய்டன்
பிரதாபன் மத்தியூ, குறொய்டன்
சோ.ஆர்த்தி, தோண்ரன்கீத்
சுகன்யா, தோண்ரன்கீத்
சி.கீர்த்தனா, கிறீன்பேர்ட்
பொ.கந்தசாமி, தோண்ரன்கீத்
ம.தேருஜா, தோண்ரன்கீத்
ம.இந்துகா, தோண்ரன்கீத்
அபிதா சத்தியநாதன், எட்ச்வெயர்
சரிகா சாந்தக்குமார், மோடன்
டிலக்ஷன் சக்தீஸ்வரன், ரூட்டிங்
ம.பகாந்தன், தோண்ரன்கீத்
இ.அபிசன், தோண்ரன்கீத்
நிலானி தவராசா, விம்பிள்டன்
நிஷாந்தன் தவராசா, விம்பிள்டன்
அர்ச்சுன் மோகன், றெய்னஸ்பார்க்
கிருஷாந்தி தங்கராஜா, வெம்பிளி
இரவிக்குமார் நிதுர்சன், வால்த்தம்ஸ்ரோ
சரஸ்வதி குகதாசன், சட்டன்
வீ.அனந்தன், றொல்வேர்த்
பாமினி நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
நிவேதன் நிர்மலேந்திரா, கொலியஸ்வுட்
இ.சருசன், தோண்ரன்கீத்
சோ.சஞ்சிகா, தோண்ரன்கீத்
என்.அகீல், குறொலி
கந்தையா யோகராஜா, லூசியம்
மகிநோத் நரசிம்மன், இல்பேர்ட்
சாதனா குலோத்துங்கன், இல்பேர்ட்
சாரங்கன் லோகேஸ்வரன், எட்மென்ரன்
திலகவதி குமாரசாமி, தோண்ரன்கீத்
எஸ்.எம்.மூர்த்தி, சவுத்வுட்பேர்ட்
ம.அக்சயா, கற்பேர்ட்
சுதாகரன் சுலேகா, சவுதம்ரன்

# நவ்று தடுப்பு முகாமில் முடங்கிக் கிடந்த 82 இலங்கையருக்கு ஆஸ்திரேலியா நிரந்தர விசா வழங்குகிறது

ஆஸ்திரேலியாவுக்குள் அரசியல் தஞ்சம் கோரி புகமுயற்சிக்கையில் கைது செய்யப் பட்டு, ஆஸ்திரேலியாவுக்கு வெளியே நவ்று என்ற தீவில் தடுப்பு முகாமில் தடுத்து



வைக்கப்பட்டிருந்த 82 ஈழத் தமிழர்களில் எஞ்சியிருந்த 21 பேருக்கும் அரசு நிரந்தரப் பாதுகாப்பு விசா வழங்கியிருக்கின்றது.

ஆஸ்திரேலிய குடிவரவுத் துறை அதிகாரி யொருவர் இதனை உறுதி செய்துள்ள துடன், அவர்கள் பிரிஸ்பேர்ன் நகருக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய அதிகாரிகள் நவ்று தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருந்த 61 இலங்கையர் களுக்கு ஏற்கனவே அரசியல் தஞ்சம் வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. எஞ்சியிருந்த 21 இலங்கையர்களும் ஆஸ்திரேலியாவிற்குள் அழைத்துச் செல்லப் பட்டவுடன் நவ்று தடுப்பு முகாம் மூடப்பட்டு விடும் என்று கூறப்படுகின்றது.

அந்த நாட்டின் புதிய அரசு இந்தத் தடுப்பு முகாமை மூடுவது குறித்த உறுதி மொழியை ஆஸ்திரேலியாவுக்கு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தோனேசியாவிலிருந்து படகு மூலம் ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல முயன்ற 83 இலங்கையர்கள் கடந்த வருடம் மார்ச் மாதம் நடுக்கடலில் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் அநேகமானவர்கள் 18 முதல் 28 வயதிற்குட்பட்ட மாணவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மருத்துவ சிகிச்சைக்காக பேர்த்தில் அனுமதிக்கப்பட்டிருந்த இவர் களில் ஒருவருக்கும் நிரந்தரப் பாதுகாப்பு விஸா வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

# பீட்ரூட் சாறு குடித்தால் இரத்த அழுத்தம் குறையும்: பிரித்தானிய ஆய்வாளர்கள் தகவல்

தினமும் ஒரு குவளை பீட்ரூட் சாறு குடித்தால் உயர் ரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம் என்று பிரித்தனிய ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இலண்டன் மருத்துவக் கல்லூரியில் ஆராய்ச்சியாளர்கள் இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டனர்.

பீட்ரூட்டில் நைட்ரேட் சத்து உள்ளது. நாம் அடிக்கடி சாப்பிடும் கீரையிலும் நைட்ரேட் சத்து உள்ளது. பீட்ரூட் சாற்றை தினமும் குடித்தாலோ அல்லது, நைட்ரேட் சத்து நிறைந்த காய்கறிகளை நிறைய சாப்பிட்டாலோ, உயர் ரத்த அழுத்தம் பெருமளவு குறைவதாக அந்த ஆய்வில் தெரியவந்துள்ளது.

அந்த ஆய்வுக் குழுவின் தலைவர் பேராசிரியர் அம்ரிதா அலுவாலியா இத்தகவலைத் தெரிவித்ததாக டெய்லி டெலிகிராப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.



**தமிழில் சாரதிகளின் எழுத்துப் பரீட்சை வகுப்புகள்**

**Theory Test Classes in Lewisham**

- **Theory Test மற்றும் Hazard Perception Test ஆகியவை இலகுவான முறையில் தமிழில் விளக்கப்பட்டு, கணனிமூலம் பயிற்சிகள் வழங்கப்படுகிறது.**
- **தனி வகுப்புகள், கூட்டுவகுப்புகள் ஒழுங்கு செய்யலாம்.**
- **பரீட்சைகளுக்கும் ஒழுங்குசெய்து தரப்படும்**



**தொடர்புகளுக்கு: வேந்தன் 07749051394**

# யாழ்.நகரிலுள்ள நடைபாதைக் கடைகளில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள் விற்பனை நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக உள்ள நடைபாதைக் கடைகளில் சுகாதாரமற்ற முறையில் உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நடைபாதைக் கடைகளில் பிஸ்கட்வகைகள் நிலத்தில் கொட்டி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அவை சவர்க்கார வகைகள் மற்றும் சம்போ வகைகளுடன் வைத்து விற்கப்படுகின்றன.

இதன் காரணமாக உணவுப் பொருள்களில் சவர்க்கார வாசனையே காணப்படுவதாக கூறப்படுகிறது.

பிஸ்கட் வகைகளில் சுகாதாரக் கேடுகள் இருப்பதாக கூறப்படுகிறது.

பிஸ்கட் வகைகள் போன்று மேலும் சில உணவுப் பொருள்கள் இவ்வாறு வைத்து விற்பனை செய்யப்படுவதாக வும் உரியவர்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கப்பல் பயணிகளின் பொருள்களுக்கு இனிக் கட்டணம் அறவிடப்படும்

யாழ். திருமலை கப்பல் பயணிகள் இனிமேல் 25 கிலோவுக்கும் கூடுதலான பொருள்களை தங்களுடன் எடுத்துச் செல்ல முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேலதிக ஒவ்வொரு 25 கிலோவுக்கும் 3 ஆயிரத்து 162 ரூபா 50 சதம் செலுத்த வேண்டும் என்று கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளதாக யாழ். அரச அதிபர் அறிவித்துள்ளார்.

இதுவரை கப்பல் பயணி ஒருவர் ஆகக் குறைந்தது 25 கிலோ பொருள்களை கட்டணம் இன்றி எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் பெரும்பாலான பயணிகள் மட்டுப்படுத்தப்பட்ட எடைக்கு அதிகமாகப் பொருள்களை எடுத்துச் செல்வது வழக்கம்.

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும் இடையில் கப்பலில் பயணஞ்செய்ய ஒரு வழிக் கட்டணம் 3 ஆயிரத்து 162 ரூபா 50 சதம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.


## KNC School of Motoring

★ DSA Approved Driving Instructors with more than 20 years experience.
★ PASSPLUS registered Instructors.
★ New Drivers save £'s with Car Insurances.
★ Motorway Lessons.
★ All the Instructors are members of the Association of Driving Instructors and Road Safety Officers of Haringay

தமிழரால் தமிழில் தமிழர்களுக்கு ஓட்டுனர் பயிற்சி

உங்கள் *Theory Test and Hazard Perception Test*
ஆகிய இரண்டும் தமிழில் கணனி மூலம் பயிற்சி வழங்கப்படும்
*Practical Test* தமிழில் தரமான முறையில் பயிற்றுவிக்கப்படும்

Area Covered West London.

Please contact Patrick:
**Tel: 07956 387386, 020 8864 9329,**
**Fax : 020 8423 0403**


# யாழ். குடாநாட்டில் குடிசன மதிப்பீடு: மக்கள் மத்தியில் பலத்த சந்தேகம்!

யாழ்.குடாநாட்டில் நிலவும் மிக மோசமான சூழ்நிலை காரணமாக அங்கிருந்து பெருமளவு மக்கள் வெளியேறிய நிலையில் விசேட கணக்கெடுப்பென்ற பெயரில் அங்கு குடிசன மதிப்பீட்டில் அரசு இறங்கியுள்ளது.

இந்த நடவடிக்கையில் அரச அதிகாரிகளுடன் படையினரும் இணைந்து செயற்படுவது மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

குடாநாட்டில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் விசேட குடிசனக் கணக்கெடுப்பை மேற் கொண்டுவருகிறது.

கிராமசேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத் தர்கள் மற்றும் அரச ஊழியர்களே இந்த ஆட்கணக்கெடுப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுடன் படையினரும் சென்று ஆட்கணக்கெடுப்பை மேற்கொள்வதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. பொதுமக்களும் இதனை உறுதிப்படுத்து கின்றனர்.

தினமும் அரச ஊழியர்கள் ஒவ்வொரு பிரதேசத்திலும் மேற்கொள்ளும் இந்தக் கணக்கெடுப்பின் விபரங்கள் அன்றைய தினம் மாலை அந்தப் பகுதிகளிலுள்ள இராணுவ சிவில் நிர்வாக அலுவலகத்தில் ஒப்படைக்கப் படவேண்டும்.

மறுநாள் மேற்படி சிவில் நிர்வாக அலுவலகத்திற்கும் சென்று முதல்நாள் அவர்களிடம் ஒப்படைத்த பத்திரங்களைப் பெற்று படையினருடன் சேர்ந்து சென்று தொடர்ந்தும் இந்த குடிசனமதிப்பீட்டை கிராமசேவகர்களும் சமுர்த்தி உத்தியோகத்தர் களும் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தக் குடிசன மதிப்பீட்டில் அரச இலச்சினை பொறித்த சிவப்பு வர்ணத்திலான துண்டுகளில் விசேட கணக்கெடுப்பு- 2007 என்று அச்சிடப்பட்டுள்ளதுடன்இ அவை அனைத்து வீடுகளிலும் ஒட்டப்படுகின்றன.

இந்தக் கணக்கெடுப்பில் ஆட்களுள்ள வீடுகள் ஆட்களற்ற வீடுகளின் எண்ணிக்கை இ குடும்ப விபரங்களில் 18 வயதுக்குக் கீழ்பட்டோர், 18 வயதுக்கு மேற்பட்டோர், ஆண், பெண் விபரங்கள் சேகரிக்கப் படுகின்றன.

குடாநாட்டில் நிலவும் மிக மோசமான சூழ்நிலையால் தினமும் மக்கள் அங்கிருந்து வெளியேறி வருகையில் படையினரும் இணைந்து மேற்கொள்ளும் இந்தக் குடிசன மதிப்பீடு குறித்து மக்கள் மத்தியில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

# வடபகுதி அரச ஊழியருக்கு ஆங்கில, சிங்கள மொழிப்பயிற்சி

வடபகுதியில் உள்ள அரச ஊழியர்களுக்கும் அதிகாரிகளுக்கும் சிங்களம் மற்றும் ஆங்கில மொழி மூலமான பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அரசகரும மொழித்திணைக்களம் இதற்கான சுற்று நிருபங்களை அரச செயலகங் களுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

விண்ணப்பதாரர் ஒருவர் ஆங்கிலம் அடிப்படை அல்லது உயர்கற்கை நெறிக்கோ இல்லாது விடில் சிங்களமொழி கற்கைக்கோ விண்ணப்பங்களை அதற்கென உரிய படிவத்தில் தயார் செய்து அனுப்பலாம்.

இவ்வருடம் முதல் ஆங்கிலக் கற்கை நெறி விசேடமாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

விண்ணப்பங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரிவு ரீதியாக பயிற்சி நடத்த அரச கரும மொழித் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இணையத்தளத்திலும் சுற்று நிருபத்தைப் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# உவர்மலைப் பகுதியில் இருவரும் மூர் வீதியில் ஒருவரும் இறந்துள்ளனர்.

நகரப் பகுதியில் உள்ள மனையா வெளி, உவர் மலை, மூர் வீதி, விகாரை வீதி, சுமோதகம், ஜமாலியா போன்ற இடங்களில் கடந்த ஒன்றரை மாதங்களில் 34 நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த மழை காரண மாக சிறிய சிறிய தேக்கத்தில், ரின், டயர், கோம்பை, பிளாஸ்ரிக் பாத்திரங்களில் தங்கியிருக்கும் நீரின் ஊடாகவே இந் நோய்க்கான நுளம்புகள் பெருகுகின்றன. எனவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருந்து இவற்றை அகற்ற வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## தமிழரின் வங்கிக் கணக்கு விவரம் பொலிஸ் கோருவது உரிமை மீறல்! குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக படிவம் சமர்ப்பிப்பு

கொழும்பில் தங்கியிருக்கும் அல்லது வசிக்கும் தமிழர்களிடம் அவர்களின் வங்கிக் கணக்குகளின் விவரங்களையும் அவற்றில் உள்ள பணத்தின் தொகையையும் தெரிவிக்கும்படி வற்புறுத்தும் ஒழுங்குவிதியை பொலிஸார் பலவந்தமாகத் திணிப் பது பெரும் சட்ட மீறலும் அடிப்படை உரிமை மீறலுமாகும்.

இவ்வாறு நேற்றுமுன்தினம் உயர்நீதி மன்றத்தில் தமிழர்கள் சார்பில் தெரிவிக்கப் பட்டது.

தலைநகரிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழர்கள் வகைதொகையின்றி கைதுசெய்யப் படுவதை ஆட்சேபித்து இ.தொ.கா. தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மனுதாரர் தரப்பின் மூத்த சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இத் தகவலை நீதிமன்றுக்குத் தெரியப் படுத்தினார்.

மேற்படி வங்கிக் கணக்கு இலக்கங்கள், அவற்றில் உள்ள பணத்தின் தொகை ஆகியவற்றை வெளிப்படுத்தும்படி கோரி முகத்து வாரம் பொலிஸாரால் அப்பகுதித் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்ட படிவத்தின் பிரதியும் நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பு சட்டத்தரணியால் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறு தங்களின் வங்கிக் கணக்கு, அதில் உள்ள பணத்தொகை போன்ற விடயங்களை வெளிப்படுத்துமாறு வலியுறுத்துவது கட்டாயப்படுத்துவது சம்பந்தப்பட்ட நபரின் அடிப்படை உரிமையை அப்பட்டமாக மீறும் செயற்பாடாகும்.

இப்படி ஒவ்வொரு பொலிஸ் நிலையமும் தன்னிச்சைப்படி தான்தோன்றித்தனமாக தத்தமது பிரதேசங்களில் தமிழர்களை மோசமான நெருக்குதல்களுக்கும் சட்ட விரோதமான முறையில் அழுத்தங்களுக்கும் உட்படுத்துகின்றன என்றும் மனுதாரர் தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்தார்.

# குடாநாட்டில் ஞாயிறு முதல் பாண்விலை அதிகரிப்பு

குடாநாட்டில் மாசி 24 முதல் பாணின் விலை ரூபா 48 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை கிலோவுக்கு ரூபா 81 ஆக மாசி 11ஆம் திகதி முதல் குடாநாட்டில் விலை அதிகரிப்புச் செய்யப்பட்டது. எனினும், பாணின் விலை அப் போது உயர்த்தப் படவில்லை என்பது தெரிந்ததே.

மாசி 24ஆம் திகதி முதல் பாண் மற்றும் பணிஸ் வகைகளின் விலைகள் அதிகரிக்கப் படுகின்றன.

இதன்படி 450 கிராம் பாணின் விலை ரூபா 48 ஆகும். 150 கிராம் கிறீம் பணிஸ் ரூபா 25 ஆகவும் 130 கிராம் ரீபணிஸ் மற்றும் சங்கிலி பணிஸ் என்பன ரூபா 23 ஆகவும் 70 கிராம் கொம்பு பணிஸ் ரூபா 15 ஆகவும் ஸ்பொன்ஞ் கேக் ரூபா 12ஆகவும் அடைக் கேக் ரூபா 19 ஆகவும் விலை அதிகரிப்புச் செய்யப்படுகின்றன.

# அறுவடையோ மிகுதி கூலியாட்களோ குறைவு

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதிகளில் நெல் அறுவடை செய்வதற்குக் கூலி ஆள்களுக்குப் பற்றாக்குறை நிலவி வருகின்றது.

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் இம் முறை போதியளவு நெல் விளைச்சல் ஏற் பட்டுள்ளதால் கூலியாள்கள் சகலரும் தத்தமது பகுதியிலேயே வேலை செய்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் வேறு இடங்களுக்கு வேலை தேடிச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இதன்காரணமாக ஏனைய இடங்களில் கூலி ஆள்களுக்குப் பலத்த தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# மதபோதகர் கொலை தொடர்பாக நால்வர் கைது

அம்பாறை நகரில் கடந்த மாசி மாதம் 17ம் திகதிஇரவு மதபோதகர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது தொடர்பாக ஊர்காவற் படையைச் சேர்ந்த மூவரும் வர்த்தகர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை நகரில் சம்பவ இரவு பெந்த கொஸ்தே சபை மதபோதகர் ஒருவர் ஆயுதபாணிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்தச் சம்பவத்தில் இவரது மனைவி படுகாயமடைந்ததுடன் மகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டார்.

இதனையடுத்து அம்பாறை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையிலேயே இக் கொலை தொடர்பாக வாகன வர்த்தகர் ஒருவரும் மூன்று ஊர்காவல் படையினரும் கைது செய்யப்பட்டனர்.

தனது மனைவியை இந்த மதபோதகர் மதமாற்றம் செய்ததால் கடும் சீற்றமடைந்த வர்த்தகர் மேற்படி மூன்று ஊர்காவல் படையினருக்கும் பணம் கொடுத்து மதபோதகரை சுட்டுக் கொன்றதாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மதமாற்றம் செய்வதில் ஈடுபட்டுவந்த இந்தப் போதகரைக் கொல்வதற்காக மேற்படி மூன்று ஊர்காவற் படையினருக்கும் வர்த்தகர் ஒரு இலட்சம் ரூபா வழங்கியிருந்ததாகவும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை பொலிசார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறு அச்செய்தியில் குறிக்கிடப் பட்டிருந்தது.

# யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முஸ்லிம், சிங்கள மாணவர்கள் அனுமதி

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு முஸ்லிம் மற்றும் சிங்கள மாணவர் களைச் சேர்த்துக் கொள்வதென பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

வடபகுதியின் குழப்ப நிலை காரணமாக கடந்த பல வருடங்களாக சிங்கள, முஸ்லிம் மாணவர்கள் குறித்த பீடத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்த வருடம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட வுள்ளனர் என்றும் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்தார்.

போதிய ஆய்வுகூடம், வைத்தியசாலை வசதிகள் போன்ற வசதிகள் இன்மையால் யாழ். மருத்துவபீட வகுப்புகளைக் கொழும்பில் ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SKY WINGS LTD

**TRAVEL AGENTS WORLWIDE**



24 hour Ticketing



ROYAL JORDANIAN

◆ HOT DEALS
Srilankan Specials

◆ South India Specials
Holiday Packages
Special Fares

◆ Far East Specials
Holiday Packages
Special Fares

◆ Holiday Packages
Special Fares

ATOL 5766

◆ Europe Specials ◆ Caribbean Specials

119 Tooting High Street
London SW17 0SY

IATA

**Tel: 020 8672 9111**



## BIRAVENAAS

**South Indian & Sri Lankan Restaurant and Bar**

Open Daily
Monday –Thursday
12.pm to 11.30pm
Friday to Sunday
12pm -01am



FREE DELIVERY*

**Lunch Buffet £5.95**
**12.30 – 3.30**

1, Sandhurst Market Sandhurst Road
Catford, London SE6 1DL

**Tel: 020 8695 8625**

*Orders over £12 with in 3 miles 6-10pm



## EELAM SHOP

## ஈழம் கடை

இலங்கை, இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மளிகைப் பொருட்கள், கடலுணவு வகைகள், பத்திரிகைகள் சஞ்சிகைகள் போன்ற அனைத்துப் பொருட் களையும் மனநிறைவுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்



399 Lewisham High Street
London
SE13 6NZ
Tel: 020 8690 6545



## EVEREST CURRY KING

சுத்தம், சுவை, தரம்
இவைகளுக்கு மறுபெயர் எவரெஸ்ட்...

நண்டு, இறால், கணவாய், சுறா, மீன், நெத்தலி போன்ற கடல் உணவுகளை பல சுவையில் சுவைத்து மகிழ்ந்திட..



24 Loampit Vale
Lewisham
Tel : 020 8691 2233



## JK Gold & Fashion House

☆ உங்களுக்கு தேவையான பட்டுகள், மாலைகள், சாமிப் படங்கள், சிலைகள் மற்றும் கோவிலுக்கு தேவையான பொருட்கள் அனைத்தும் பல தெரிவுகளில் கிடைக்கும்.

☆ மேலும் முறுக்கு உரல், துருவுபலகை, இடியப்ப உரல்கள்-தட்டுகள், போன்ற வீட்டு உபகரணங்களையும் பல ரகங்களில் தெரிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம்.



ஆண்கள் பெண்கள்
சிறுவர்களுக்காக
ஆடைகள்
மலிவு விலையில்...

தங்க நகைகளும்
மிக மிக மலிவு
விலையில்...

புதிதாக வரவழைக்கப்பட்ட விதம் விதமான ஆடைகள் விற்பனையாகிறது.

JK Gold House & Fashion House
314-316 London Road
Croydon CR0 2TJ
Tel: 020 8684 4577
Fax: 020 8684 4677


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org